விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில் dishtv
கிடைக்கும்
SATS-TECH
(C-3326)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 12 திங்கட்கிழமை (29.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 314

## என்னை கொல்ல சதி செய்யப்பட்டது

# நல்லாட்சியை நாசமாக்கினார் ரணில்

# மகிந்தவை பிரதமராக்குவதே ஒரேவழி



### நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட உரை

(கொழும்பு) என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய மிக முக்கியமான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில் என் முன்பாக எஞ்சியிருந்த ஒரே தீர்வு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து அவரை பிரதமர் பதவியில் அமர்த்தி புதிய அரசாங்கத்தை அமைப்பது மாத்திரமேயாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய விசேட உரையில் தெரிவித்துள்ளார். (04-ம் பக்கம் பார்க்க...)

## மகிந்த ராஜபக்ஷவுக்கு அதிகரிக்கும் ஆதரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 26-ம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமராக நியமிக்கப்பட்ட நிலையில், பாராளுமன்றத்தில் 113 எம்.பிக்களின் ஆதரவை திரட்டும் முயற்சியில் மைத்திரி - மகிந்த கூட்டணி ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 95 உறுப்பினர்களைக் கொண்டுள்ள நிலையில். அதற்கு மேலதிகமாக ஒரு உறுப்பினரை கொண்டுள்ள ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஏற்கெனவே தமது ஆத 02

## ரணிலின் பாதுகாப்பு குறைப்பு பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை குறைப்பதற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை 10 ஆக குறைக்குமாறு அவர் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டு 24



## ரணதுங்கவின் காவலரின் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பு- தெமட்டகொடவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரான அர்ஜுன ரணதுங்கவின் பாதுகாப்பு அதிகாரிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர உயிரிழந்தார் என்று தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத் 24

## நாட்டை முன்னேற்றவே பொறுப்பை ஏற்றேன்

# தேர்தல்: மாகாணம் உடன்; நாடாளுமன்றம் விரைவில்

### பிரதமர் மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான தேர்தலை உடன் நடத்துவதும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான அழைப்பை கூடிய விரைவில் விடுவதுமே புதிய மாற்றத்தின் முக்கிய நோக்கம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார். 24

## மைத்திரியின் செயற்பாட்டால் ஏமாற்றம்; இந்தியாவுடன் பேசியே முடிவாம்!

### மாவை எம்.பியின் நிலைப்பாடு



(யாழ்ப்பாணம்)

எதிர்த்து களமிறங்கிய அணியையே தற்போது தன்னுடன் இணைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற் 02

## எழுத்துமூலம் உத்தரவாதம் வழங்கும் தரப்புக்கே ஆதரவு

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் த. தே. கூவின் நிபந்தனைகளை ஏற்று எழுத்துமூலம் உத்தரவாதம் வழங்கும் தரப்பினருக்கு ஆத 24

## மகிந்த இன்று பிரதமராக கடமை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் பிரதமராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ள உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 26-ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதற்கு முன்னதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா 24

## அலரி மாளிகையை விட்டு ரணில் வெளியேறமாட்டார்!

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையை விட்டு வெளியேறுமாறு கூட்டு எதிரணியினர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெரும்பான்மை பலம் உள்ளது. நாம் இதனை நிரூபிப்போம். அரசியலமைப்பிற்கு அமை 02

## கேபிள் ரீ.வி இணைப்பினூடாக மின் பாய்ந்து குடும்பப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்கு வழங்கப்பட்டிருந்த கேபிள் ரீவி இணைப்பின் ஊடாகப் பாய்ந்த மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் ஒருவர் யாழ். நகர்ப்பகுதியில் உள் வீடு ஒன்றில் நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியை சேர்ந்த இராசநாயகம் லீலாவதி (வயது66 ) என்ற 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மைத்திரியின் செயற்பாட்...

பாடு மிகுந்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, ஆட்சி மாற்றம் தொடர்பான அரசியல் நிலைப்பாடுகளை சர்வதேசத்துடனும் இந்தியாவுடனும் பேசி இறுதி முடிவை எடுப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றங்கள் கொந்தழிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அதிலும் யாரும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன. யாரும் எதிர்பார்க்காத சூழலில் யாருடனும் பேசாமல் ஜனாதிபதி தனித்தே இத்தகையதொரு முடிவை எடுத்திருக்கின்றார்.

அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டில் ஜனநாயகவிரோதச் செயற்பாடுகள் நிறைந்த குடும்ப ஆட்சி நடைபெறுவதால் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டுமென நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் விரும்பியிருந்தது.

அதற்கமைய பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறக்கப்பட்டு அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சிறுபான்மைக் கட்சிகள் பலவும் ஆதரவை வழங்கி வெற்றி பெற வைத்தனர்.

அதன் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஆட்சியொன்று நடைபெற்று வந்திருந்த நிலையில் எந்தத் தரப்பை எதிர்த்து அவர் களமிறங்கி வெற்றி பெற்றாரோ அதே தரப்பை தற்போது இணைத்துக் கொண்டுள்ளார். அதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டை அல்லது அவரது ஆட்சி அதிகாரத்தை பலரும் எதிர்த்து வந்த நிலையில் தற்போது அவரையே பிரதமராக நியமித்திருக்கின்றார்.

தேர்தலின் போது பல்வேறு வாக்குறுதிகளைக் கூறி வந்த ஜனாதிபதி அவருடைய இந்த ஆட்சிக் காலத்தில் அவர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை செய்யவில்லை என்பதுடன் அதனை மீறியே நடந்திருக்கின்றார். அதிலும் யாரை மாற்ற வேண்டுமென்று நாம் ஆதரவை அவருக்கு வழங்கினோமோ அவரையே தற்போது பிரதமராகவும் கொண்டு வந்துள்ளமை தமிழ் பேசும் மக்களுக்கு மிகப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேவேளை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் காணி விடுவிப்பு உள்ளிட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பல பிரச்சினைகளுக்கும் தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வந்த மகிந்த ராஜபக்ஷ தரப்பினரின் பொது எதிரணியினர் தற்போது ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருப்பதால் இவை எல்லாவற்றுக்கும் இனிமேல் என்ன நடக்கப் போகின்றதென்ற அச்சம் ஏற்படுகிறது.

இவ்வாறானதொரு நிலைமையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடிகள் காரணமாக பாராளுமன்றத்தில் இரு தரப்பினரும் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு எமது ஆதரவைக் கோரியிருக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தவரையில் யார் பிரதமர் என்பதை விட இனப்பிரச்சினைக்கு தர்வு காண வேண்டும் ஐ.நா மனித உரிமைகள் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே கோரிக்கையாக இருக்கின்றது.

ஆகவே ஆட்சி மாற்றத்தின் போது சர்வதேச சமூகமும் பெரும் பங்காற்றியிருந்தது. அதே போன்று ஐ.நா தீர்மானத்தில் சர்வதேச சமூகம் உதவியாக இருந்தது. ஆகவே அவர்களுடன் பேச வேண்டிய அவசியம் எமக்கு இருக்கின்றது. அதனடிப்படையில் இந்த விடயத்தில் நாம் கட்சிக்குள்ளும் அயல் நாடான இந்தியா உட்பட சர்வதேச நாடுகளுடன் மனித உரிமை பேரவையுடனும் கலந்துரையாடியே இறுதியான தீர்மானத்தை எடுப்போம்.

குறிப்பாக நாட்டில் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ இப்போது வந்த பின்னர் சீனா மட்டும் தான் அவரைச் சந்தித்துள்ளது. ஆனால் மற்றைய நாடுகள் அவ்வாறு செயற்படவில்லை. உண்மையில் ஒரு நாட்டின் ஜனாதிபதி அல்லது பிரதமர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டால் உலக நாடுகள் பலவும் ஆதரவையும் வாழ்த்தையும் தெரிவிக்கும். ஆனால் தற்போது அவ்வாறு நடைபெறவில்லை. ஏனெனில் இந்த மாற்றத்தால் சர்வதேசம் மகிழ்ச்சியடைவில்லை. அதனையும் சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகையினால் நாம் சர்வதேசத்துடனும் இந்தியாவுடனும் பேசி இறுதி முடிவை எடுப்போம் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## அலரிமாளிகையை விட்டு...

வாகவே சட்டரீதியாக பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

எனினும் தற்போது அரசியலமைப்புக்கு முரணான வகையில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். எனவே அவரை அலரிமாளிகையை விட்டு வெளியேறுமாறு கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் அவருக்குள்ளது. அதனை எம்மால் இன்று நிரூபிக்க முடியும். அதற்கு பயந்தே நாடாளுமன்றத்தினை அவர்கள் ஒத்திவைத்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இன்று பொது விடுமுறை என்ற குறுந்தகவல் பொய்

## அரச தகவல் திணைக்களம்

இன்று திங்கட்கிழமை அரச பொது விடுமுறை என்று அனுப்பப்படும் குறுந்தகவல் உண்மைக்கு மாறானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக இன்று திங்கட்கிழமை அரச பொது விடுமுறை என்று செய்திச் சேவை ஒன்று குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) ஒன்றை அனுப்பியுள்ளது.

இந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை நிராகரிக்கும் அரச தகவல் திணைக்களம், நாளை எந்தவொரு பொது விடுமுறையும் பிரகடனப்படுத்தப்பட வில்லை என்று சுட்டிக் காட்டியுள்ளது. (மு)

---

இதேவேளை பிரதமராக தம்மை தொடர்ந்தும் உரிமை கோரிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நூற்றுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியக் கடதாசிகளை சமர்ப்பித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஏனைய கட்சிகள் சிலவற்றின் ஆதரவையும் கொண்டுள்ளோம். பாராளுமன்றத்தில் எமக்கு பெரும்பான்மை உள்ளது.

பாராளுமன்றத்தை விரைந்து கூட்டுமாறும் சபாநாயகரிடம் நாம் கோரி வருகிறோம் என்று ராஜித சேனாரத்த கூறியுள்ளார். (மு)

## மகிந்த ராஜபக்ஷவுக்கு...

ரவினை மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

ரணில் அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த வேலுச்சாமி இராதாகிருஷ்ணனே தனது ஆதரவினை மகிந்தவுக்கு வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளார்.

மேலும் அவரது கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்தகுமாரும் மகிந்த் ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பில் குறித்த கட்சியின் நிர்வாக குழு கூட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்தவின் அமைச்சரவையில் வேலுசாமி இராதாகிருஷ்ணனுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் காலை சந்தித்து, தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ஷவுக்கு, ஏற்கெனவே ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி ஆனந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

இவர்களின் ஆதரவுகளுடன் 113 என்ற எண்ணிக்கையை தாண்டலாம் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. (மு)

**பனை வளமும், பனைவளத்தை நம்பி வாழும் பல்லாயிரம் குடும்பங்களும் கூட்டுறவு முறையும் பாரிய பண மோசடி அதிகார துஷ்பிரயோகத்திலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்**



இலங்கையில் பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படுகின்ற இக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் ஒரே மூலவளமான பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு வாழும் பல்லாயிரம் மக்களின் வாழ்வாதாரமும், பனை வள உற்பத்திகளும், விற்பனைகளும் ஏற்றுமதிகளும் பாதுகாக்கப்படுமா என ஏங்கித் தவித்த மக்களுக்கு திடீரென ஏற்பட்ட அரசியல் மாற்றம் பெரும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் அரசியல் அதிகாரத்தை முன்வைத்து பனம் பொருட்களின் உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதி மற்றும் ஆராய்ச்சியும் அழிவுப் பாதையில் சென்றதுடன் மோசடிகளும் நடைபெற்றன.

இந் நிலையில் திடீரென ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் தமிழர்களின் பெரும் சொத்தாக கருதப்பட்டு வந்த பனை வள அபிவிருத்திச் சபையும் ஆராய்ச்சி நிறுவனமும் ஏற்றுமதிகளும் காப்பாற்றப்பட்டுள்ளன.

புதிய அரசும் அபிவிருத்தியாளர்களும் குறிப்பிட்ட மோசடியையும் அது சார்ந்தவர்களையும் இனம் கண்டு, நடைபெற்று வரும் முறையற்ற உத்தியோக நியமனங்கள், பல கோடி ரூபா பண மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து எமது பொருளாதாரத்தை காப்பாற்ற வேண்டும்.

பனம் பொருள்
கூட்டுறவு சார்ந்த-பெருமக்களே!
தன் கையே தமக்குதவி-என்ற
அடிப்படையில் துணிந்து செயற்படுங்கள்
எதிர்காலம் உமதே.

**க.நடராசா**
**பனை சார் நிறுவனங்களின் நிறுவுநரும்,**
**சபையின் முன்னாள் தலைவரும், சமூக சேவையாளரும்.** (6198)

## மரண அறிவித்தல்

### திருமதி லீலாவதி இராசநாயகம்

(ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை)



*இல.733, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி இராசநாயகம் நேற்று (28.10.2018) அன்று அகாலமரணமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-சின்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற பீற்றர் இராசநாயகத்தின் மனைவியும், அலன் பிரசாந்தின் அன்புத் தாயாருமாவார்.*

*அன்னாரின் பூதவுடல் நாளை (30.10.2018) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடைக்கலமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*


**இல.733, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**மகன்**

(6198)

# அதிகாரம் இருந்தாலும் எதேச்சதிகாரமான முறையில் ஜனாதிபதி செயற்படக் கூடாது

## ஜயம்பதி எம்.பி.சுட்டிக்காட்டு




(கொழும்பு)

ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்பட்டாலும் எதேச்சதிகாரமான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களின் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி நியமித்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

"கடந்த ஏப்ரல் மாதத்தில் பிரதமருக்கு எதிராக வந்த நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்து அன்று அவருக்கு பாராளுமன்றம் நம்பிக்கை வெளியிட்டது. எனவே அன்றைக்கும் இன்றைக்கும் இடையில் பாராளுமன்றத்தில் மாற்றமொன்று இடம்பெறவில்லை.

"பிரதமரை நீக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே காணப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமையே இந்த நிலை ஏற்பட்டது. அன்றும் அதற்கு முன்னைய தினமும் பாராளுமன்றம் கூடியது. குறித்த இரண்டு தினங்களிலும் அரசாங்கத்தின் சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு இருக்கும்போது அரசாங்கத்துக்கு ஆதரவில்லை என்று எவ்வாறு கூற முடியும். எனவே இது பிழையான விடயம்". எனத் தெரிவித்தார்.

இதேவேளை, "பிரதமரை நீக்குவதற்கு அதிகாரம் இல்லை, அதிகாரம் இருந்தாலும் எதேச்சதிகாரமான முறையில் அதனை பயன்படுத்த முடியாது" என பாராளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டில் இராணுவ ஆட்சி

## ஐ.தே.க. அமைச்சர்கள் தெரிவிப்பு பெரும்பான்மையை நிரூபிக்க கோரிக்கை

(கொழும்பு)





பாராளுமன்றத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபித்ததன் பின்னர் நாம் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர்களான நளின் பண்டார மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அலரி மாளிகையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்கள்,

அலரி மாளிகையை விட்டு நாம் வெளியேற மாட்டோம், சட்டரீதியாக பாராளுமன்றத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபியுங்கள் அதன் பின் நாங்கள் அலரி மாளிகையை விட்டு வெளியேறுகின்றோம்.

பாராளுமன்றத்தைக் கூட்டாமல் இருப்பது இராணுவ ஆட்சியாக கருதப்படும். இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஜனநாயகம் எந்தப் பக்கம் நிலை நாட்டப்படுகின்றதோ அந்தப் பக்கமே அதன் ஆதரவும் இருக்கும்.

தற்போது நாட்டில் இடம் பெறுவது சட்டவிரோதமான அரசியல் செயற்பாடு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்எனவும்அவர்கள்மேலும் தெரிவித்தனர். (இ-7)

# பிரதமர் மகிந்த தலதாமாளிகையில் வழிபாடு



(கண்டி)

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ, கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். நேற்று ஞாயிற்றுக்கி ழமை காலை தமது முக்கியஸ்தர்கள் சகிதம் அங்கு சென்ற பிரதமர் மகிந்த பூஜை வழி பாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றார். (இ-7)

# ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்பட வேண்டும்

## இலங்கை அரசியல் நிலவரம் குறித்து இந்தியா கருத்து

(டில்லி)



இலங்கையில் ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படவேண்டும் என இந்தியா கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையில் திடீர் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று பல மணிநேரத்தின் பின்னர் இலங்கை நிலவரம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரவீஸ் குமார் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தியா இலங்கையில் நடைபெறும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக நாடு என்ற அடிப்படையிலும் நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையிலும் இலங்கையில் ஜனநாயக விழுமியங்களும் அரசமைப்பு நடைமுறையும் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கை மக்களுக்கு எங்களது அபிவிருத்தி உதவிகளை தொடர்ந்தும் வழங்குவோம் எனவும் அவர் தெரிவித்துள்ள்ளார். (இ-7)

# சுகாதார அமைச்சு பணியகத்துக்கு சீல்

## மைத்திரியின் அதிகாரிகள் அதிரடி

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுடன் சென்ற ஜனாதிபதி செயலக அதிகாரிகள், குழுவொன்று, சுகாதார அமைச்சின் பணியகத்தை நேற்று முன்தினம் சீல் வைத்து மூடியுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இருந்து சில ஆவணங்களை இனம் தெரியாத நபர்கள் சிலர் அகற்ற முயற்சிப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அரசியல்வாதி ஒருவரின் ஆதரவாளர்களே சுகாதார அமைச்சின் ஆவணங்களை அகற்ற முயன்றதாக, ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவத் துறை நியமனங்கள் மற்றும் மருந்துகள் கொள்வனவு தொடர்பான, சில ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரால் அகற்றப்பட்டிருக்கக் கூடும் என்றும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் தற்போதைய நகர்வுகளை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், அவரைக் குறிவைத்தே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. (இ-7)

# அரசியலமைப்புப் பொறிக்குள் சிக்க வைக்கப்பட்டார் மகிந்த

(கொழும்பு)

பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவின்றி பிரதமராக மகிந்த ராஜபக்ஷ சத்தியப் பிரமாணம் செய்தமையானது தமக்கு எதிராக வைக்கப்படும் அரசியலமைப்பு ரீதியான பொறி என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று மகிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, பெரும்பான்மை பலத்தை பெற்று தருவதாக பசில் ராஜபக்ஷ தனக்கு உறுதி வழங்கியிருப்பதாக கூறியுள்ளார்.

பிரதமரை மாற்றி ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற விடயத்தை இறுதி வரை விரும்பாத பசில் ராஜபக்ஷ மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்பது கூட்டு எதிர்க்கட்சியின் குறித்த நாடாளுமன்ற குழுவின் நிலைப்பாடாக இருப்பதாகவும் அரசியல் வட்டாரத்தின் மூலம் தெரிய வருகின்றது. (இ-7)

# நல்லாட்சி...

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு நேற்று மாலை ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு,**

இன்று உங்கள் முன் எனது இந்த கருத்துக்களை முன்வைக்க தீர்மானித்தமை ஒரு தெளிவை முன்வைப்பதற்காகவாகும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி இந்த நாட்டின் எனது அன்புக்குரிய பொது மக்களாகிய உங்களின் ஏறத்தாழ 62 இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொடுத்து என்னை உங்களின் பிரதம சேவகனாகவும் அரச தலைவனாகவும் பெரும் எதிர்பார்ப்புகளுடனேயே தேர்ந்தெடுத்தீர்கள்.

அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்காக இன்றும் நான் உங்களுக்கு எனது மதிப்புடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, இன்றும் எதிர்காலத்திலும் நீங்கள் என்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையினை பாதுகாப்பதுடன் எனது உயிரைப் பணயம் வைத்தேனும் அவற்றை நிறைவேற்றுவேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

2014ஆம் ஆண்டு பொது வேட்பாளராக என்னை தெரிவு செய்த போது எனக்கு முகங்கொடுக்க நேர்ந்த இக்கட்டான நிலமையை பற்றியும் உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

இந்த நாட்டு அரசியலில் எவருமே பொறுப்பேற்காத பாரதூரமான அரசியல் சவாலையே அன்று நான் பொறுப்பேற்றேன்.

அதேபோலவே கடந்த 2018 ஒக்ரோபர் 26ஆம் திகதி நான் மேற்கொண்ட தீர்மானமானது. 2014 நவம்பர் 21ஆம் திகதி நான் மேற்கொண்ட தீர்மானத்தைவிட மிகப் பாரதூரமான, சவால்மிக்க அதே நேரத்தில் மிகவும் இக்கட்டான ஒரு தீர்மானமே ஆகும் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நம்புகின்றேன். இந்த அனைத்து தீர்மானங்களையும் உங்களதும் எனதும் அன்புக்குரிய இந்த தாய் நாட்டுக்காகவும் அன்புக்குரிய பொது மக்கள் உங்களுக்காகவுமே என்பதை நான் இங்கே மிகுந்த கௌரவத்துடனும் பணிவுடனும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015ஆம் ஆண்டு எனது உயிரைப் பணயம் வைத்து அன்று பெற்றுக்கொண்ட அந்த அரசியல் வெற்றியை கொச்சைப்படுத்தும் வகையில் ஒழுக்கமிக்க அரசியலுக்கு ஒவ்வாத அரசியல் செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்க பிரவேசித்தார். இலங்கையின் எதிர்காலத்தை அவரும் அவருடன் நெருங்கி செயற்படும் உண்மையான மக்களின் உணர்வுகளை உணராத ஒரு சில செல்வந்தர்கள் குழுவினரின் களியாட்ட செயற்பாடுகளாக்கிக் கொண்டார் என்பதே எனது நம்பிக்கையாகும். குறிப்பாக நல்லாட்சி அரசாங்கம் எனும் கருப்பொருளை ரணில் விக்கிரமசிங்க மிக வெளிப்படையாகவே துஷ்பிரயோகம் செய்தார் என்பதே எனது நம்பிக்கையாகும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி நான் வெற்றியீட்டிய தன் பின்னர் 09ஆம் திகதி மாலையில் நான் ஜனாதிபதியாக பதவியேற்ற அதே கையோடு ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் 47 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே அவருடன் இருந்த பின்னணியிலும் அவரை பிரதமர் பதவியில் அமர்த்தியமை எனக்கு ஞாபகம் இருப்பதைப் போல் உங்களுக்கும் ஞாபகம் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

இருப்பினும் அந்த உன்னதமான நல்லாட்சி கோட்பாடுகளையும் நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் ரணில் விக்கிரமசிங்க நாசமாக்கினார் என்பதை என்னைப் போலவே நீங்களும் கடந்த சில ஆண்டுகளாக பெற்ற அனுபவங்களில் அறிந்திருப்பீர்கள் என நான் நம்புகின்றேன். நாட்டில் ஊழலும் மோசடியும் தலைதூக்கின.

டி.எஸ்.சேனநாயக்கவின் அரசியல் நோக்கு, டட்லி சேனநாயக்கவின் அரசியல் நோக்கு, ரணசிங்க பிரேமதாசவின் அரசி யல் நோக்கு ஆகியன ஐக்கிய தேசிய கட்சியினை ஒரு பலமிக்க, அரசியல் கட்சியாக எவ்வாறு உருவாக்கின என்பதையும் நமது கலாசாரம், நாட்டுப் பற்றுமிக்க நமது உற்பத்திகள் உட்பட அனைத்தையும் எந்தளவு பாதுகாத்தன என்பதையும் நாட்டின் தனித்துவம், ஒருமைப்பாடு ஆகிய எமது உயரிய தன்மைகளை அந்த சிரேஷ்ட தலைவர்கள் எந்தளவுக்கு பாதுகாத்தார்கள், அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள் என்பதையே நான் கூறினேன். ஆகையால் நான் இப்போதும் பிரார்த்திப்பது ஐக்கிய தேசிய கட்சியின் தற்போதைய தலைவர்களுக்கு டி.எஸ், டட்லி, ஜே.ஆர்.ஜெயவர்தன, பிரேமதாச ஆகியோர் கடைப்பிடித்த அந்த அரசியல் நோக்குகள்மிக்க இன்றைய உலகுக்கு பொருந்துகின்ற ஒரு சமூகத்தை உருவாக்கத்தக்க அறிவு கிட்ட வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

### கூட்டுப் பொறுப்பு ரணிலிடம் இல்லை

ரணில் விக்கிரமசிங்க பொதுவாகவே கூட்டுச் செயற்பாடற்ற, தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும் மிகவும் முரட்டுத்தனமான பிடிவாதமிக்க முறையிலேயே அரசாங்கத்தில் செயற்பட்டார். அவரின் அந்த செயற்பாடுகள் ஒரு பாரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கியது. கூட்டுத் தீர்மானங்கள், கலந்துரையாடல்கள், கருத்துப்பரிமாறல்கள் அற்ற நிலையில் அவரின் நெருங்கிய சகாக்களுடன் மாத்திரம் கலந்தாலோசித்து முடிவுகளை எடுத்ததன் காரணமாக ஒரு நாடு என்ற வகையில் எமக்கு துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டது. இங்கே இன்னொரு விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலான காலப் பகுதியில் கொள்கை ரீதியிலான அரசியல் பிளவையும் வேறுபாட்டையும் முரண்பாடுகளையும் நான் தெளிவாகக் கண்டேன். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கைக்கும் எனது அரசியல் கொள்கைக்கும் இடையில் கொள்கை ரீதியிலான மோதல் ஏற்பட்டது. அதுமாத்திரமன்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் பாரிய கலாசார வேறுபாடுகளையும் நான் கண்டேன். அவருக்கும் எனக்கும் இடையிலான இந்த அரசியல் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள், அரசியல் கலாசார ரீதியிலான வேறுபாடுகள், தனிநபர் சார்ந்த வேறுபாடுகள் ஆகிய அனைத்தும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடியை மிக மோசமாக்குவதற்கு காரணமாக அமைந்தன என நான் நம்புகின்றேன்.

நான் ஏனைய சிரேஷ்ட தலைவர்களுடன் கூடியிருந்த காலங்களில் நாம் இணைந்து செயற்படுவோம். கூட்டாக செயற்படுவோம். நாம் எடுக்கும் தீர்மானங்களை கலந்துரையாடி மேற்கொள்வோம். நல்லாட்சி கோட்பாடுகளை அடையும் வகையில் நாம் செயற்படுவோம் என நான் ரணில் விக்கிரமசிங்கவிடம் பல தடவைகள் எடுத்துக் கூறினேன். எனினும் 62 இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர் மக்களின் அந்த உன்னதமான அபிலாசைகளை அவர் கவனத்தில் கொள்ளவில்லை. அவர் அப்படி நடந்ததையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன்.

இந்த நாட்டின் தலைமைத்துவத்தை நான் பொறுப்பேற்றது இந்த நாட்டை இலஞ்சம், ஊழல் அற்ற நல்லாட்சி கோட்பாடுகளை முதன்மைப்படுத்திய புத்தாக்கமிக்க மிகச் சிறந்ததோர் அரச நிர்வாகத்தை நிலைநாட்டுவதற்கேயாகும். கடந்த கால அனுபவங்களுடன் தற்கால, எதிர்கால சவால்களை அறிந்து எமது நாட்டின் எதிர்காலத்தை மிகவும் உயரிய வகையில் எதிர்கால குறிக்கோள்களை அடையும் அதே வேளை, ஆன்மீக நல்லொழுக்கமிக்க சிறந்த கோட்பாடுகளுடன் முதன்மைப்படுத்தி செயற்பட நான் தொடர்ந்தும் முயற்சித்து வந்ததுடன், அதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்.

அந்தச் சம்பவத்துடன் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு செயற்பட்டார் அவரது நடத்தை எவ்வாறானதாக இருந்தது என்பது பற்றி இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. மிகுந்த பதற்றத்துடனேயே அவர் செயற்பட்டார்.

### மத்திய வங்கிக்குச் செல்ல விடாமல் ரணில் என்னைத் தடுத்தார்

அச்சமயம் மத்திய வங்கியின் பணிக்குழாமை சந்திக்க நான் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தபோது ரணில் விக்கிரமசிங்க எனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு ஓடி வந்து மிகுந்த பதற்றத்துடன் அவர் என்னிடம் கூறினார். மத்திய வங்கி எனது கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. அதாவது வர்த்தமானிமூலம் எனது கட்டுப்பாட்டுக்கு கீழேயே இருக்கின்றது. அதனால் நீங்கள் எதற்காக மத்திய வங்கிக்கு போக வேண்டும் என என்னிடம் வினவினார்.



அப்போது நான் அவரிடம் உங்களுக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்த வங்கி கையளிக் கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை. ஆனால் நான் இந்த நாட்டின் ஜனாதிபதி அல்லவா எனக்கு அங்கு செல்வதற்கு உரிமை இருக்கின்றதல்லவா? எனக் கூறினேன். அவ்வாறு கூறிவிட்டு இன்னும் சொற்ப நேரத்தில் மத்திய வங்கிக்கு செல்ல போகிறேன் எனக் கூறினேன். அத்தோடு அவர் எனது வீட்டை விட்டு வெளியேறினார்.

சொற்ப நேரத்தின் பின் நான் மத்திய வங்கியை சென்றடைந்த போது மத்திய வங்கி நிதி மோசடி காரணமாக விடுமுறையில் இருந்த மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் என்னை வெற்றிலை கொடுத்து வரவேற்க மத்திய வங்கி வாசலில் காத்திருந்தார். அவர் எவ்வாறு அங்கே வந்தார் என நான் ஆச்சரியப்பட்டேன். அப்போது அவர்கள் மிகவும் பதற்றத்துடன் நடந்து கொண்ட விதத்தையும் பதற்றமடைந்திருந்த அவர்களது மனோ நிலையையும் அப்போது நான் தெளிவாகக் கண்டேன். அந்த சம்பவத்தினால் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது. அதற்கு தீர்வு காணும் வகையிலும் மக்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வகையிலுமே ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தேன். அந்த ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்து அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் என்னைக் குறை கூறியவாறு ஏன் ஆணைக்குழுவை நியமித்தீர்கள் என என்னிடம் வினவினார்கள். அப்படி செய்ததன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நான் அவமதிப்பை ஏற்படுத்தினேன் என்பதே அவர்களது எண்ணமாக இருந்தது. அதற்கு நான் அந்த சம்பவத்தின் உண்மையை அறிவதற்கும் மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்கவுமே நான் இந்த ஆணைக்குழுவை நியமித்தேன் எனக் கூறினேன்.

மத்திய வங்கியின் அந்த சம்பவமே பொருளாதார ரீதியில் இன்னும் எம்மால் தலைதூக்க, முடியாத மிக மோசமான பெரும் பொருளாதார பின்னடைவை ஏற்படுத்திய காரணியாக இருக் கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தல்களில் கிடைத்த பெறுபேறுகளை அரசின் குறைபாடுகளை திருத்திக் கொள்ள மக்கள் வழங்கிய ஒரு தீர்ப்பாகவே நான் கருதுகின்றேன். ஆகையால் அதன்போது ரணில் விக்கிரமசிங்கவையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களையும் அழைத்து நாங்கள் மூன்று வருடங்களாக மேற்கொண்ட செயற்பாடுகளைப் பற்றி மக்கள் இப்போது தமது தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். நாங்கள் இப்போது எம்மை திருத் திக் கொள்ள வேண்டும் எனக் கூறினேன். அத்தோடு பிரதமரிடம் நீங்கள் எனது அதிகாரத்தையும் கையிலெடுத்து செயற்பட்டீர்கள் ஆயினும் என்னை அதிகாரத்தில் அமர்த்தும் செயற்பாட்டிற்கு நீங்கள் முன்னின்று உழைத்ததால் அதற்கு நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் மௌன மாக இருந்தேன் எனக் கூறினேன்.

### ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்த ரணிலுக்கு வாய்ப்பளித்திருந்தேன்

அந்த நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்ற உயரிய பண்பினை நான் பின்பற்றியதால் ஒரு புறத்தில் நாட்டுக்கு பெரும் தீங்கு விளைவிக்கப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தான் விரும்பியவாறு சில வேளைகளில் ஜனாதிபதி அதிகாரங்களைக் கூட உபயோகப்படுத்திக் கொள்வதற்கு அவருக்கு நான் அதிகாரத்தைக் கொடுத்திருந்தேன்.

இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? கடந்த மூன்று வருட காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்கள் காரணமாக மிக மோசமான அவல நிலையே ஏற்பட்டிருக்கின்றது. எனது உரை இன்னும் நீடிக்கும் என்பதால் காலத்தை நான் வீண்விரயம் செய்ய விரும்பவில்லை. ஆயினும் எதிர்வரும் காலங்களில் அவ்வப்போது அந்த விடயங்களைப் பற்றி நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என நான் எண்ணியிருக்கின்றேன். இந்த சம்பவங்களின் பின்னணியில் இரண்டு நாட்களுக்கு முன் நான் எடுத்த தீர்மானம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை பிரதமர் பதவியில் அமர்த்து வதற்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களை பிரதமர் பதவியில் இருந்து நீக்குவதற்குமான முடிவை நான் எடுப்பதற்கு மிக முக்கியமான காரணத்தை மிகுந்த மதிப்புடன் நான் உங்களுக்கு விளக்கிக் கூற விரும்புகின்றேன்.

### பொலிஸ் மா அதிபர் நாடகமாடினார்

எனது அரசியல் வாழ்க்கைக்கு இன்று 51 வருடங்களுக்கு மேலாகின்றது. கடந்த சில தினங்களாக ஊடகங்களில் தோன்றிய நாமல் குமார எனும் நபர் என்னையும் கோத்தபாயராஜபக்ஷவையும் கொலை செய்யவிருக்கும் சதித்திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்டார். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவிற்கு நான் பணித்தேன். ஆனால் பொலிஸ் மா அதிபர் முதலில் அந்த விசாரணைகளை குற்றப் புலனாய்வு விசாரணை பிரிவினரிடம் கையளித்திருக்கவில்லை. பொலிஸின் வேறொரு பிரிவினரிடமே அதனைக் கையளித்திருந்தார். அதன் போது அந்த விசாரணைகளின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்ற நிலைமை ஏற்படும் என்பதை நான் உணர்ந்தேன். அவ்வாறு ஊட

(23ம் பக்கம் பார்க்க...)

# ரணிலின் பாதுகாப்பை உறுதி செய்க சபாநாயகருக்கு ஐ.தே.கட்சி கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு சபாநாயகர் கரு ஜெயசூரியவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

பிரதமரின் பாதுகாப்பினையும் சிறப்புரிமைகளையும் உறுதி செய்யுமாறு கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் ஹாசீம், பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் இந்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

அந்தக் கடிதம் வருமாறு.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிறப் புரிமைகளைப் பாதுகாத்தல் அவசியம். இலங்கை நாடாளுமன்றின் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவே வகித்து வருகின்றார்.

அரசியல் அமைப்பின் 42(4) சரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு உள்ளிட்ட சிறப்புரிமைகளை அதேவிதமாக பேணிப் பாதுகாப்பதனை உறுதி செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)



# பிரதமர் பிரச்சினைக்கு உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோருங்கள்-சட்டத்தரணிகள் சங்கம்

நாட்டில்தற்பொழுது எழுந்துள்ள அரசியல் சிக்கல் நிலைமைக்கு சிறந்ததொரு தீர் வுதான் உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோருவது என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்க வேண்டும் எனவும், அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் சிக்கலான ஒரு நிலைமை மீண்டும் ஏற்படும் எனவும் அச் சங்கத்தின் தலைவர் யு.ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வானொலியொன்றுக்கு நாட் டின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## அரசியல் குழப்ப நிலை

# உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை காரணமாக, சில உணவுப் பொருட்களின் விலைக ளைக் குறைக்க சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தேநீர் 5 ரூபாவினால் இன்றிலிருந்து குறைக்கப்படவுள்ளதாகவும், உணவுப் பொதி, கொத்து ரொட்டி என்பவற்றின் விலையும் 10 ரூபாவினால் குறைக்க சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தற்போது நாட்டில் நாம் எதிர பார்த்த சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. ஜனாதிபதியின் முடிவு மற்றும் தற்போதைய பிரதமர் மீது எமக்கு பூரண நம்பிக்கை யுள்ளதாலேயே இந்த விலைக் குறைப்பை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்க அரசு திட்டம்

சேதன பசளையை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டம் விவசாய அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் சேதன பசளையை பெற்றுக் கொள்வதற்காக விவசாயி ஒருவருக்கு ஒரு ஹெக்டெயர் நிலப் பரப்புக்காக 18 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்காக வருடாந்தம் அரசாங்கம் மூவாயிரத்து 300 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (இ-7)

## சிங்களத்தில் உள்ளதே இறுதியானது

# இலங்.அரசியல் யாப்பின் அடிப்படையில் ஜனாதிபதியால் பிரதமரை நீக்க முடியும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



இலங்கை அரசியல் யாப்பின் 48(1)இன் அடிப்படையில் ஜனாதிபதியால் பிரதமரை பதவிநீக்க முடியுமென பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பின் சிங்கள மொழிமூலத்தில் இவ்விடயம் தெளிவாக காணப்படுவதாகவும், ஆங்கிலத்தில் இவ்விடயம் குறிப்பிடப்படவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், சிங்கள மொழிமூலமான அரசியல் யாப்பே இலங்கையில் உத்தியோகபூர்வமானதென பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரதமர் செயலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற வழக்காடல்களிலும் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படும் போது அவர்கள் சிங்கள மொழியில் உள்ளவற்றையே அதிகாரபூர்வமாக கருதுவதாக பீரிஸ் தெரிவித்தார்.

அந்தவகையில், ஜனாதிபதியின் தீர்மானம் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதென அவர் மேலும் தெரிவித் தார்.

மேலும், தற்போதைய பிரதமர் தெரிவானது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தவிர்க்க முடியாத விடயம் என்றும் காலத்தின் தேவையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சிவப்பிரகாசம் சிறீக்குமரன்

*மண்டைதீவு 02 ஆம் வட்டாரம் (சுவிஸ்)*



மண்டைதீவு 02 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட எமதூரின் மைந்தரும் எமது ஆலய பரிபாலன சபையின் முன்னை நாள் பொருளாளர் அமரர் கந்தையா சிவப்பிரகாசம் ஆசிரியர் அவர்களின் புதல்வரும் எமது ஊர் எழுச்சியுற வேண்டுமென்ற பெரும் ஆவல் கொண்டு பொது நிறுவனங்கள், ஆலய பரிபாலன சபைகள் ஊடாகவும் தாம் தனியாகவும் பல நற் பணிகளில் இணைந்து அளப்பரிய பணிகள் பல புரிந்த ஒரு நிகரில்லா சமூகப் பணியாளனாக தன்னை அடையாளப்படுத்தி வாழ்ந்த ஒரு மாமனிதர் சிவப்பிரகாசம் சிறிக்குமரன் மறைந்தார் என்ற செய்தி எம்மை நிலைகுலைய வைத்துள்ளது.

வழியின்றி தவிக்கின்றோம். அவரது இழப்பு எம்மண்ணிற்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும். இவரை பிரிந்து தாளாத்துயரில் இருக்கும் உறவினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கண்ணீரால் அவருக்கு அஞ்சலி செலுத்துவதோடு அவரது ஆத்மா எம் குலதெய்வமாகிய அன்னை முத்துமாரியின் பாதார விந்தங்களில் நித்தியப் பேறடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

(சி-4265)

**அவரது பிரிவால் துயருறும் மண்டைதீவு வேப்பந்திடல் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை, மண்டைதீவு**

# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கேட்டை

சந் | செவ் | ராகு | கேது | சனி | குரு, புத | சூரி, சுக்

**29.10.2018**
ஐப்பசி 12, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 4.39 மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 8.23 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
அமிர்தசித்தம்

**வளவன்**

**மேடம்:** குடுபத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம், சவால்களைச் சமாளிக்கும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வியாபார விருத்தியுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள், வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்:** தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி கேட்டு வரலாம், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், கௌரவமான நாள்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகும்.

**கும்பம்:** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

# 3 கிணறுகளையும் பராமரிக்கும் பொறுப்பை சாவகச்சேரி பிரதேச சபை ஏற்க வேண்டும்

## தவிசாளரிடம் உறுப்பினர் கோரிக்கை

(சாவகச்சேரி)

நாவற்குழி 300வீட்டுத் திட்டம் பகுதியிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மூன்று குடிநீர்க் கிணறுகளையும் பராமரிக்கும் பொறுப்பை சாவகச்சேரி பிரதேசசபை பொறுப்பேற்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் தி.தங்கவேலு தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஜே/294 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நாவற்குழி 300வீட்டுத்திட்டம் பகுதியில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மூன்று குடிநீர் கிணறுகளையும் பராமரிக்கும் பொறுப்பை சாவகச்சேரி பிரதேசசபையினர் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கிணறுகள் மூன்றும் தகுந்த பராமரிப்பு இன்றிக் காணப்படுவதுடன் கிணற்று நீர் பல்வேறு தேவைகளுக்கும் பாரிய நீர்த்தாங்கிகளில் வகை தொகையின்றி எடுத்துச் செல்லப்படுகிறது.

இதன் காரணமாக இந்தக் கிணறுகளுக்கு அருகில் உள்ள மேட்டுநில பயிர்ச்செய்கை தோட்டக் கிணறுகள் மற்றும் 350க்கும் மேற்பட்ட பொது மக்கள் குடியிருப்பு கிணறுகள் ஆகியவற்றின் தண்ணீர் அளவு குறைவடைகிறது.

அத்துடன் 300மீற்றர் தூரத்தில் கடற்கரை அமைந்திருப்பதால் கிணற்று நீரிலும் உவர்த்தன்மை ஏற்படுகிறது.

மேலும் இந்தக் குடிநீர் கிணறுகளை மூடி அடைக்க முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இந்த மூன்று கிணறுகளையும் சிறந்த வகையில் பராமரிக்கும் வகையில் சாவகச்சேரி பிரதேச சபையிடம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

# ஆடைத் தொழிற்சாலைக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் "தொழில் நிலையத்தினால்" தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியாக கட்டுநாயக்காவில் இயங்கும் முன்னணி ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் 1000 வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி (வியாழக்கிழமை) யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந் நேர்முகத் தேர்வில் 18 முதல் 35 வயதிற்கு இடைப்பட்ட பெண்கள் பங்கு பற்றி தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ரூபா.30 ஆயிரம வரையிலான மாதாந்த சம்பளத்துடன் தங்குமிடம், உணவு வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் இலவசமாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும். நேர்முகத் தேர்விற்கு வருபவர்கள் தங்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வருகை தருவது விரும்பத்தக்கது.

மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட செயலக தொழில் நிலையத்தில் நேரடியாகவும் 021 221 9359 இலக்க அலுலக தொலைபேசி ஊடாக வும் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# சாரணர்களுக்கு தலைமைத்துவ வதிவிடப் பயிற்சி முகாம் யாழில்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழுவினால் சாரணர்களின் தலைமைத்துவ பண்பினை விருத்தி செய்யும் நோக்கமாக மூன்று நாட்கள் கொண்ட வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்று சிறப்புற கல்லூரி வளாகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இதில் பல்வேறு துறை சார்ந்த வளவாளர்கள் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிகளை சாரணர்களுக்கு வழங்கியிருந்தனர். இதன் போது சாரணர்களிடையே மறைந்திருந்த பல்வேறு திறமைகள் வெளிக்காட்டப்பட்டிருந்தமை அனைவரதும் பாராட்டினையும் பெற்றிருந்தது. குறித்த நிகழ்விற்கு கல்லூரி அதிபரின் வழிகாட்டுதலில் திரி சாரணர்களின் பூரண ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. துருப்புத் தலைவர் சி.பிரணவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வினை குழுச்சாரண பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன் நெறிப்படுத்தியிருந்தார்.

இந் நிகழ்வுகள் கடந்த 22 ஆம் திகதி (திங்கட்கிழமை) மாலை மூன்று மணியளவில் சாரணர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக இறுதி நிகழ்வானது கடந்த 24.10.2018 புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ்.தவகோபால் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (இ-7)

# அதிபர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்படும் அதிபர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு எதிர்வரும் 3.11.2018 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

கத்தோலிக்க ஆசிரியர்கள் இவ் அறிவித்தல்களை கருத்தில் கொள்ளுமாறு யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவர் ரி.எடிசன் அறிவித்துள்ளார். (இ)

# பற்றைக் காணிக்குள் கசிப்பு உற்பத்தி!

## இருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி கிழக்குப் பகுதியில் பற்றைக் காணி ஒன்றிற்குள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கெற்பேலி பகுதியைச் சேர்ந்தவர்கள் என வும் 18 மற்றும் 19 வயதைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன் போது சாவகச்சேரி பொலிஸாரால் 18 லீற்றர் கசிப்பு, 225லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய 2 பரல்கள், தகரகம்பிகள், பட்டர், ஈஸ்ட் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கையை சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரி சோதகர் ஹரிச மற்றும் மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர். பிரதீப் தலைமையிலான ரஞ்சித், நவரத்தினம், லலித், தினேஷ், தர்ஷன ஆகியோர் உள்ளடங்கிய பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (இ-30)

# யாழ்ப்பாணம் சிறையில் கைதி தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைசாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று காலை தற்கொலை முயற்சி மேற்கொண்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 23வயது என்ற இளைஞரே மேற்படி தற்கொலை முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

திருட்டுக் குற்றச்சாட்டில் கடந்த செப்ரெம்பர் மாதம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் யாழ். நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தன்னைப் பார்ப்பதற்கு உறவினர்கள் எவரும் சிறைச்சாலைக்கு வரவில்லை என்ற மனவிரக்தியில் சில நாட்களாக இருந்துள்ளார். இந்த நிலையிலேயே அவர் தற்கொலை முயற்சியை மேற்கொண்டுள்ளார் என சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-9-101)

# நூல்வெளியீடும் அன்பளிப்பும்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகம் மற்றும் நல்லூர் பிரதேச சபை இணைந்து நடத்தும் நூல் வெளியீடும் அன்பளிப்பும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் நா.தியாகமூர்த்தி தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சுதர்ஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7-78)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 49 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் இரத்ததான முகாம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை யாழ்ப்பாணம் பழைய பூங்காவீதி இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. (இ)

# சிவயாத்திரை இரகசியம்

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் கந்தபுராண விரிவுரை மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும். இதில் நாளை "சிவயாத்திரை இரகசியம்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)



கோப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவின் SMART SOCIAL CIRCLE அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வாரம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

## கடுகதி புகையிரதம் மீது கல்வீச்சு காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த கடுகதி புகையிரதம் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கல்லெறித் தாக்குதலில் படுகாயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வடமராட்சி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் இரண்டு மாதங்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி உடுத்துறை தெற்கைச் சேர்ந்தவரும் குருநாகலில் வசித்து வந்தவருமான பாலசிங்கம் சிவ்செல்வம் (வயது -64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த குடும்பஸ்தர் கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புகையிரதத்தில் பயணித்துள்ளார்.

பிற்பகல் 4 மணிக்கும் 4.30 மணிக் குமிடையில் பரசங்கவேவுக்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட பகுதியில் புகை யிரதம் மீது நடத்தப்பட்ட கல்வீச்சுத் தாக்குதலில் குறித்த நபர் நெற்றியிலும் தலையிலும் படுகாயமடை ந்தார்.

உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் கோமா நிலையில் இருந்த குறித்த நபர் இரண்டு மாதங்களின் பின்னர் நேற்று உயிரிழந்துள்ளார். (இ-9)

## பாராளுமன்றத்தை முடக்கி

# நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட இடமளிக்க வேண்டாம்

## ஜனாதிபதியிடம் சபாநாயகர் கோரிக்கை



(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பதனூடாக நாட்டில் அசாதாரணமான சூழ்நிலை ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாம் என சபாநாயகர் கருஜெயசூரிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றப்பிரேரணையை கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில்பெரும்பான்மையினை உறுதிப்படுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பாராளுமன்றத்தை அவசரமாக கூட்டுவதற்கான சந்தர்ப்பத்தினை தடுக்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தை முடக்கி வைக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஊடகவியலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளேன்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபிய ஊடகவியலாளருக்கு ஏற்பட்ட அனர்த்த நிலையை இலங்கை அரசாங்கம் கண்டிப்பதுடன், இத்தகைய நிகழ்வுகள் உலகில் எங்குமே இடம்பெறக்கூடாதென்றும் ஜனாதிபதி மைத்திரிபால .சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் 7 ஆவது பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள், சவால்கள் மற்றும் கஷ்டங்கள் பற்றி விளங்கிக் கொள்ளக்கூடிய ஒருவர் என்ற வகையில் அரச கொள்கைகளுக்கேற்பவும் தனிப்பட்ட முறையிலும் ஊடகவியலாளர்களின் உரிமைகளையும் சலுகைகளையும் உறுதிப்படுத்துவதற்கு தான் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை பலப்படுத்துவதற்கு தான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து பல்வேறு நடவடிக்கை களை எடுத்துள்ளதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, ஊடகவியலாளர் ஒருவரை படு கொலை செய்வது, தொந்தரவுகளை கொடுப்பது, நாட்டை விட்டு வெளியேறச்செய்தல் போன்ற எந்தவொரு நிகழ்வும் தனது பதவிக்காலத்தில் இடம்பெறாததையிட்டு தான் மகிழ்ச்சி அடைவதாகவும் இது தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய வெற்றியாகுமென்றும் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகள் பற்றி கண்டறிவதற்காக குழுவொன்றை அமைத்து, அதன் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தும் அவை நடைமுறைப் படுத் தப்படாமை குறித்த பிரச்சின்ன தொடர்பில் தான் கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்குத் தேவையான அரசாங்க தலையீட்டை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்போம்—தினேஷ்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிச்சயம் தமது பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டவுள்ளதாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. இந்த வருடம் பெப்ரவரி மாதமே அவரது ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

"அத்துடன், புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு பல கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஆதரவாக உள்ளனர்" என்று தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளதாகவும் அது குறித்த இறுதி முடிவை சபாநாயகருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரதமராகப் பதவியேற்ற மகிந்த பிரி. பிரஜைகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானிய பிரஜைகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் விசேட எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

சமகாலத்தில் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக, தமது நாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பு தொடர்பில் பிரித்தானியா கரிசனை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் திடீர் அரசியல் மாற்றம் காரணமாக அவதானமாக இருக்குமாறும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அல்லது விசேட அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் எனவும், இலங்கைக்கு செல்லும் போது குறுகிய கால விசா பெற்றுக் கொள்ளுமாறும் பிரித்தானிய பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

முழுமையான பயண மற்றும் மருத்துவ காப்பீடு பெற்றுக் கொள்ளுமாறு பிரித்தானிய சுற்றுலா பயணிகளிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை - இங்கிலாந்து கிரிக்கெட் தொடரை பார்க்க இலங்கை வந்துள்ள சுற்றுலா பயணிகளுக்காக விசேட வழிகாட்டி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலைமை தொடர்பில் தொடர்ந்து ஆராய்ந்து சுற்றுலா பயணிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரித்தானியா விடுத்துள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றுள்ள நிலையில், அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதுடன், நாட்டில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற தோற்றப்பாடு உருவாக்கியுள்ளது. இந்நிலையில் தமது நாட்டு பிரஜைகளுக்கு பிரித்தானியாவின் எச்சரிக்கை வெளியாகியுள்ளது. (இ-7)

## அரசியல் கைதிகளை விடுவிக்க நாமல் ராஜபக்ஷ நடவடிக்கை

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ அண்மையில் பொறுப்பேற்றுள்ள நிலையில் பல்வேறு அரசியல் மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இன்று புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விவகாரம் குறித்து காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இது குறித்த நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அரசியல் கைதிகள் விவகாரம்குறித்து விசேட ஆவணம் ஒன்று தயார் செய்து முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இதனையடுத்து அரசியல் கைதிகள் விவகாரம் குறுகிய காலத்தில் திடமான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு துரித விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் 26.10.2018 அன்று இடம்பெற்ற கோண்டாவில், மக்கள் நலன் பேணும் அமைப்பின் 6 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் பொழுது வருடா வருடம் அவர்களால் வழங்கப்படும் சிறந்த சமூக சேவையாளருக்கான 2018 ஆம் ஆண்டுக்கான விருதினை

**கௌரவ மனோ கணேசன்**

(அமைச்சர், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள்)

அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட

**திரு.இ.குவேந்திரநாதன்**

அவர்களை நாமும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

(6185)

**உரிமையாளரும், ஊழியர்களும், விஸ்ராவிசன், யாழ்ப்பாணம்.**

# மலையக மக்களின் சம்பள உயர்விற்கு ஆதரவாக உடையார்கட்டு மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடையார் கட்டுப்பகுதியினை சேர்ந்த குறிஞ்சி மக்கள் முன்னேற்ற கழகம் மலையக மக்களின் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பிற்கு ஆதரவு தெரிவித்து கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன் றினை முன்னெடுத்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பமான பேரணியில் குறிஞ்சி மக்கள் முன்னேற்ற கழகத்தினை சேர்ந்த தொண்டர்கள் பலர் கலந்து கொண்டுள்ளதுடன் இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான சி.சுதர்சன், ஆ.ஜோன்சன், சுகந்தினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிதாக வரவுள்ள அரசிடமும் மலைய மக்களின் அடிப்படை சம்பளத்தினை ஆயிரம் ரூபாவாக உயர்த்த கோரிக்கை விடுத்துள்ளதுடன் இதுதொடர்பிலான அறிக்கை ஒன்றினை நேரடியாக சென்று கையளிக்கவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜோன்சன் தெரிவித்துள்ளார். (7-281-250)

# ஜனாதிபதிக்கே தொடர்ந்தும் ஆதரவு; இது எனது தீர்க்கமான முடிவு

## காதர் மஸ்தான் எம்.பி. உறுதி



(குருமன்காடு)

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவரான ஜனாதிபதிக்கே தொடர்ந்தும் ஆதரவை வழங்கும் எனது தெளிவான நிலைப்பாட்டை எனது வன்னி மாவட்ட மக்களுக்கும், இந்த நாட்டிற்கும் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த கடினமான சூழ்நிலையில் மிகவும் நிதானமாக செயற்படுவது காலத்தின் தேவையாகும். கட்சியின் பொறுப்பான அமைப்பாளர் ள்ன்ற வகையில் எனது கட்சித் தலைவரான ஜனாதிபதியை ஆதரிக்க வேண்டிய தார்மீகக் கடமையை நாம் உணர்ந்து செயற்படுகிறோம்.

சில பொறுப்பற்ற ஊடகங்கள் நான் கட்சி மாறப்போவதாக கற்பனை செய்து பொய்யான தகவல்களை வெளியிடுவதை நானும் கட்சியும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது ஊடகத் தர்மத்தை கேள்விக்குட்படுத்தும் வங்குரோத்துதனத்தின் பிரதிபலிப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-250-281)




# வவுனியாவிலுள்ள 719 குளங்களில் 70 குளங்கள் பொதுமக்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது

## கமநல அபிவிருத்தித்திணைக்களம் ஆராய்வு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் 719 குளங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 70 குளங்களை பொதுமக்கள் சட்ட விரோதமான முறையில் கையகப்படுத்தப் பட்டுள்ளபோதிலும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆராயப்பட்டுவருவதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள குளங்களின் விபரங்கள் தகவல் அறியும் சட்டத்தினூடாக கமநல அபிவிருத்தித்திணைக்களத்திடம் கேட்டகப்பட்ட தகவல்களுக்கு இவ்வாறு பதில் வழங்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் 719 குளங்கள் காணப்படுகின்றபோதிலும் அவற்றில் கோவில்குளம் கமநல திணைக்களத்திற்குற்குட்பட்ட பகுதியிலுள்ள 55, கனகராஜன்குளம் 1, ஓமந்தை 4, பம்பைமடு 5, நெடுங்கேணி 1, செட்டிகுளம் 4, மொத்தமாக 70 குளங்கள் பொதுமக்களினால் கையகப் படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என வினவியபோது 2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின்கீழ் 83ஆம் பிரிவின் பிரகாரம் வழக்குத் தொடரப்பட்டது.

எனினும் இப்பிரிவின் பிரகாரம் வழக்குத் தொடர முடியாதிருப்பதால் பிரதேச செயலகத்தினூடாக காணி மீளாய்வுச் சட்டத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. (7-281)






முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதியோர், சிறுவர் தின நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்கள், முதியோர் கௌரவிக்கப்பட்டனர்.
(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பூநகரி மண்டைக்கல்லாறு பாலம் திறப்பு

(பூநகரி)

யாழ்ப்பாணம்-நாவற்குழி(ஏ-32) வீதியில் பூநகரியில் அமைந்திருந்த மண்டைக்கல்லாறு பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, கடந்த 25 ஆம் திகதி எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்த வீதியில் அமைந்துள்ள இந்தப் பாலமானது, வருடாந்தம் மழை காலத்தில் முழுமையாக வெள்ளநீர் பாய்ந்து செல்லும் பகுதியாக மாற்றமடைவதால் போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டு போகும்.

அந்தக் காலப்பகுதியில் படகு சேவையானது நடத்தப்பட்டு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனால், அப்பகுதியால் பயணிக்கும்பெருமளவான வேலைக்குச்செல்லும் ஊழியர்கள் மழை காலங்களில் அசௌகரியங்களை எதிர் கொண்டு வந்தனர்.

இந்நிலையில், ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவர் நிறுவனத்தின் கடன் நிதி மூலமான 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் மூலம், இந்தப் பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றன.

95 மீற்றர் நீளமும் 10.4 மீற்றர் அகலமும் கொண்டமைந்ததாக இந்தப் பாலம் அமைக்கப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்து, 25 ஆம் திகதி முதல் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது. எந்தவிதமான விழாக்களும் இல்லாமல், மிகவும் எளிமையான முறையில் இந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தின் வழியே வருடாந்தம் பெருமளவான நீர் வீணாகக் கடலுக்குச் செல்கின்றது என்றும், அதனை இடையில் மறித்து ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும் என்பதும் பலரது கோரிக்கையாகவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (7-26)

# இந்து மயான புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தர்மக்கேணி இந்து மயான புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளது.



நீண்டகாலமாக மக்களின் அடிப்படை தேவையாக இருந்த மயானத்துக்கான எரிகொட்டகை அமைத்தல் பணி மிக விரைவாக பூர்த்தியாக்கப்படவுள்ளதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 0.475 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினால் குறித்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

குறித்த பணிகளை பச்சிலைப் பள்ளி பிரதேசசபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் உப தவிசாளர் கஜன் உறுப்பினர்களான ரமேஸ், கோகுல்ராஜ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (7)

# தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்






(குருமன்காடு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வவுனியாவில் கண்டன போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த கண்டன போராட்டம் பழைய பேருந்து நிலையத்திற்கு முன்னால், நேற்று வவுனியா மாவட்ட வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், உழைப்பு கொடுப்பதோ கோடி ரூபாய் ஊதியமாய் கேட்பதோ ஆயிரம் ரூபாய், அரசே ஏன் பாராமுகம் 2015 தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்று, பஞ்சப்படி கேட்கவில்லை உழைப்பிற்கான ஊதியத்தை தான் கேட்கின்றோம் போன்ற பதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், இலங்கையின் 'பொருளாதாரத்தின் பெரும்பங்கை' ஈட்டித்தரும் மலையகத் தொழிலாளர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். மேலும் இலங்கையின் விலைவாசி ஏற்றம், உலகமயமாக்கலின் தாக்கம், பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றுக்கு முகம்கொடுத்துள்ள மலையகத் தொழிலாளர்கள் தமக்கு நாளாந்தச் சம்பளமாக 1000 ரூபாயை கோரி போராடி வருகின்றனர்.

ஆகையால் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே நாமும் இக்கவன யீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என தெரிவித்துள்ளனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், செ.மயூரன், எம்.பி. நடராஜா. நகரசபை தவிசாளர் இ.கௌதமன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-250)

# வவுனியாவில் மகிந்தவுக்கு வெற்றிக் கொண்டாட்டம்



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் நேற்றுக் காலை பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக உள்ள கொப்பேக்கடுவ நினைவுச்சிலையருகில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் பிரதமராக பதவியேற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக பட்டாசு கொளுத்தி அவரின் ஆதரவாளர்களினால் வெற்றிக்கொண்டாட்டம் இடம்பெற்றது.(7-281)



# யானைகளின் தொல்லையால் முல்லைத்தீவு மக்கள் அச்சம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வடகாடு மற்றும் அம்பாள்புரம் பகுதிகளில் அண்மைய நாட்களாக அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தொல்லையால் தாங்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட கொல்லவிளாங்குளம், வடகாடு, அம்பாள்புரம் ஆகிய பகுதிகளில் அண்மைய நாட்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக இப்பிரதேசங்களில் மாலை 6 மணி யானவுடன் காட்டு யானைகள் ஊர் மனைக்களுக்குள் புகுந்து பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன. இதேவேளை தமது கிராம வீதிகளில் யானைகள் நடமாட்டம் இருப்பதாகவும் இவற்றில் பயணிக்க முடியாத நிலையும் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் அண்மைய நாட்களாக ஒவ்வொரு இரவுகளை அச்சத்துடன் கழிக்க வேண்டிய ஒரு சூழல் இருப்பதாகவும் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர். (7-315)

# அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் பொது மக்களால் சிரமதானம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணி படையினரின் அபகரிப்பில் காணப்பட்டாலும் அதன் வீதியின் அருகில் கடந்த ஆண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மக்களால் நினைவிற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து காலை சிரமதான பணிகளை முன்னெடுத்துள்ளார்கள்.

இதன்போது முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிரகன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-281)

# பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி வழங்கல்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பில் தீயில் எரிந்த குடும்பத்திற்கு செஞ்சிலுவை சங்கம் உதவி வழங்கியுள்ளது


முல்லைத்தீவு 10ம் வட்டாரம் புத்துக்குடியிருப்பு பகுதியில் எந்தவித உதவிகளும் இல்லாமல் 3 பெண் பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த (சுரேஸ்குமார் பிரேமிலா) என்பவரின் வீடு அண்மையில் தீயில் எரிந்துள்ளது.

இதனால் இவர்கள் தங்கி வாழ்வதற்கு அடிப்படை வீடு இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இலங்கை செஞ்சிலுவை சங்க முல் லைத்தீவு கிளையினரால் அவர்கள் தற்காலிகமாக வாழ்வதற்கான குடில் மற்றும் நிவாரணப் பொருட்கள் பிள்ளைகளுக்கான கற்றல்உபகரணங்கள்வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுடன் இணைந்து இலங்கை செஞ்சிலுவை சங்க முல்லைத்தீவு கிளை மேற்கொண்டுள்ளது.(7-281)

# பசு மாடு வழங்கல்



(குருமன்காடு)

வவுனியா கன்னாட்டி கணேசபுரத்தில் வசித்துவரும் குடும்பத்திற்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஊடாக பசுமாடு வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த தைமாதம் தொழிலுக்கு சென்ற வேளை யானையால் தாக்கப்பட்டு தொழிலுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ள கன்னாட்டி கணேசபுரத்தை சேர்ந்த இராமன் என்பவருக்கு டென்மார்க்கை சேர்ந்த தி.ஸ்ரீமுருகனின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஊடாக பசு மாடும் மாட்டு கொட்டகை அமைப்பதற்கான பொருள் உதவியும் வழங்கி வைக்கப்பட்டது .

இப்பசு மாட்டினை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார், நிர்வாக செயலர் பிரபா கரன் ஜானுயன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (7-250-281)




# அச்சுக்கோர்ப்பு விழா

(வவுனியா)

வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் புதிய சித்திரத் தேருக்கான அச்சுக் கோர்ப்பு விழா நாளை மறுதினம் 31 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10.32 மணி வரை இடம்பெறும். (7)

# காசோலை வழங்கலும் விரிவாக்கல் நிகழ்வும்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சிகள் கடந்த 23 ஆம் திகதி புத்துவெட்டுவான், வன்னிவிளாங்குளம், செல்வபுரம, கரும்புள்ளியான் ஆகிய 04 கிராமங்களில் நடைபெற்றது.









இந்நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், பணைத்திட்டமிடல் உத்தியோகத்தர் ஈ.சற்குணன் மற்றும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் M.R.M சபான் மற்றும் M.R.M சிபான் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தென்னை தொடர்பான தொழில்நுட்ப கருத்துக்கள், பசளை பிரயோகங்கள், நடுகை முறைகள், உற்பத்தி திறனை அதிகரித்தல் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் செல்வபுரம் கிராமத்தில் 27 பயனாளிகளுக்கு காசோலை வழங்கல் நிகழ்வும் நடைபெற்றது.

இந் நிகழ்வுகளில் 200 பயனாளிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (7)

# மகிந்தவின் மீள் வருகை

# மனிதவுரிமை மீறல்கள் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

(ஜெனிவா)

**இலங்கையின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றுள்ளமை கடந்த காலத்தில் அவரது ஆட்சியின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வது குறித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் திடீர் அறிவிப்பு நாடாளுமன்றத்திற்கோ அமைச்சரவைக்கோ அறிவிக்காமல் எடுக்கப்பட்டது என தெரிவித்துள்ள மனித உரிமை கண்காணிப்பகம் ரணில் விக்கிரமசிங்க இது அரசமைப்பையும் நாடாளுமன்ற நடைமுறைகளையும் மீறிய நடவடிக்கை என தெரிவித்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட குற்றங்களிற்கு நீதி வழங்கப்படாத நிலையில் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்திற்கு வந்துள்ளமை இலங்கையின் மனித உரிமை நிலவரத்தின் எதிர்காலம் குறித்து அச்சமேற்படுத்தும் கரிசனைகளை உண்டு பண்ணியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் யுத்த குற்றங்களை அனுபவித்தவர்களிற்கு நீதி வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தவறியுள்ளமை காரணமாக கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீண்டும அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழல் மீண்டும் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக அரசாங்கத்தின் அழுத்தங்கள் இன்றி செயற்பட்டு வந்த ஊடக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகள் மீண்டும் அச்சம் நிலவும் காலத்தினை எதிர்கொள்ள வேண்டிய நிலை குறித்து அச்சமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகளவிற்கு மனித உரிமைகளை மதிக்கும் ஆட்சி நிலவுவதை உறுதி செய்வதில் பங்களிப்பு வழங்கிய நாடுகள் கடந்த சில வருடங்களில் பெறப்பட்ட நன்மைகள் இழக்கப்படாமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமரான பின்னர் அவரது ஆதரவாளர்கள் அரச ஊடகங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளன என தகவல்கள் கிடைத்துள்ளன என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் கீழ் அரச ஊடகங்கள் சுதந்திரமாக செயற்பட்டன எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் நியமனத்தை ரணில்விக்கிரமசிங்க எதிர்த்துள்ளதை அரச ஊடகங்கள் தெரிவிக்கவில்லை எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஒருகோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு கோடியே 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் கொள்ளுப்பிடிய பிரதேசத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என்பதுடன், 26 மற்றும் 36 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 891 கிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வடிவேல் சுரேஷ் மகிந்தவுக்கு ஆதரவு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இலங்கையின் புதிய பிரதமராக பதவியேற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மகிந்தவுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு அவருக்கு தனது ஆதரவையும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மீண்டும் பாதுகாப்பு செயலராக கோத்தா?

### கொழும்பு ஊடகம் தகவல்



(கொழும்பு)

புதிய பாதுகாப்புச் செயலராக கோத்தபாய ராஜபக்ஷ அடுத்தவாரம் நியமிக்கப்படவுள்ளார் என்று, கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலராக உள்ள கபில வைத்யரத்னவுக்குப் பதிலாகவே கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பாக கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதேவேளை, புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு அனைத்துலக சமூகம், ஆதரவு அளிக்க வேண்டும் என்று, கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்தார்.

"மகிந்த ராஜபக்ஷ ஆட்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர், இன்னொருவருக்கு அனைத்துலக சமூகம் ஆதரவு அளித்த பின்னர், நாட்டில் என்ன நடந்தது என்று அவர்களுக்குத் தெரியும்.

எனவே, நாட்டைமோசமடையச் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிக்குமாறு கோருகிறேன். அவரால் மாத்திரமே, நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, தாம் மீண்டும் பாதுகாப்புச் செயலராக பொறுப்பேற்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மறுப்பும் மாநாடும் அறிக்கையுமே மைத்திரியின் மனமாற்றத்திற்குக் காரணம்

### த ஹிந்து சுட்டிக்காட்டு

(சென்னை)

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தமைக்கு மூன்று சம்பவங்கள் காரணம் என இந்தியாவின் த ஹிந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றும் மறுப்பொன்றும் செய்தியாளர் மாநாடொன்றுமே மைத்திரி இந்த முடிவை எடுப்பதற்கு காரணம் என முக்கிய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் என த ஹிந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தேசிய அரசாங்கத்தின் முடிவு ஒருவார காலத்திற்கு முன்னரே நிச்சயமாகி விட்டது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த பின்னர் டில்லியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கடுமையான அறிக்கையே இறுதி தருணங்களை தீவிரப்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட அறிக்கை ஜனாதிபதியை இலக்காக கொண்டிருந்தது. இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள் தாமதமாவதற்கு ஜனாதிபதியே காரணம் என நேரடியாக குற்றம் சாட்டியது என கொழும்பை தளமாக கொண்ட அரசியல் வட்டாரங்கள் பிரதமர் அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி அலுவலகத்துடன் கலந்தாலோசனை மேற்கொள்ளவில்லை. அந்த அறிக்கை டில்லியை கூட ஆச்சரியப்படுத்தியுள்ளது.

அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை இலங்கையின் அரசமைப்பு பேரவை உச்ச நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்திற்கான ஜனாதிபதியின் இரு நியமனங்களை நிராகரித்திருந்தது.

**கொலைச் சதி**

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை பொலிஸார் ஜனாதிபதி கொலைச்சதி முயற்சி குறித்து விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினர்.

குறிப்பிட்ட செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் நாமல் குமார என்ற நபரின் தொலைபேசி உரையாடலில் கொலை சதி குறித்த எந்த தகவலும் இல்லை என தெரிவித்தார்.

பொலிஸாரின் இந்த கருத்து ஜனாதிபதியின் உயிருக்கு எந்தவித ஆபத்துமில்லை என்பது போல காணப்பட்டது.

இந்தச்சம்பவங்கள் அனைத்தினதும் ஒட்டுமொத்த விளைவாகவே மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கினார் என கொழும்பின் முக்கிய அரசியல் வட்டாரத்தை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார் என த ஹிந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

## மகிந்தவின் மீள் வருகை தமிழர்களுக்குப் பேராபத்து!

### சீமான் எச்சரிக்கை




(சென்னை)

புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதில் இந்தியாவின் தலையீடு உள்ளதாகவும், இந்திய அரசிற்கு தெரியாமல் இலங்கையில் எந்த அரசியல் மாற்றமும் நிகழப்போவதில்லை என்றும், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் எவர், ஆட்சி பீடம் ஏறினாலும் தமிழர்களுக்கு எந்த இலாபமும் இல்லை என்றும், அவர்கள் எப்போதோ உரிமை இழந்து விட்டதாகவும் கூறிய சீமான், தமிழர்கள் சொந்த நாட்டில் அடிமைகளாக நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

அத்துடன், அழிவுற்ற தமிழர்கள் மற்றும் அவர்களின் பொருளாதாரம் மீள கிடைக்கப்போவதில்லை என்றும், மகிந்தவின் வருகை மீண்டும் தமிழர்களை நோக்கிய பேராபத்து என்றும், நில மற்றும் நிர்வாக உரிமைகளை இழந்தவர்களாகவே தான் இலங்கை தமிழர்கள் வாழ்வதாகவும் தெரிவித்தார்.

மேலும் பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியும் மகிந்த ராஜபக்ஷ நண்பர்கள் என்றும் அவர்கள் இணைந்தே இத்தகைய அரசியல் மாற்ற முடிவுகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# சம்பந்தனை போன்று முட்டாள்தனமான முடிவை எவரும் மேற்கொள்ளமாட்டார்கள்

## கருணா கூறுகிறார்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சாணக்கியமான அரசியல்வாதி எனப் பலராலும் கூறப்பட்டாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மேற்கொண்ட நடவடிக்கை போன்று முட்டாள்தனமான நடவடிக்கையை எவரும் மேற்கொள்ளமாட்டார்கள் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தங்களின் சுகபோக வாழ்விற்காகவும், தங்கள் நலன்களுக்காகவும் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தாமல் எமது மக்களின் பொது நலன்களில் அக்கறையுள்ளவர்களாகச் செயற்படுவார்களாக இருந்தால் அவர்களை உண்மையிலேயே நாங்கள் வரவேற்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த நாட்டை முன்னேற்றுவதற்குப் பல வாய்ப்புகள் இருந்தும் அவற்றையெல்லாம் நழுவவிட்டு மகிந்த குடும்பத்தைப் பழிவாங்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தாரே தவிர இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என நினைக்கவில்லை.

அமெரிக்க டொலரின் விலை அதிகரிப்பானது ஒரு நாட்டின் முன்னேறாத நிலையினையே காட்டுகின்றது. பிச்சைக்கார நாடாக மாறுவதற்கான அறிகுறிதான் அது. அத்துடன் மத்திய வங்கிக் கொள்ளை போன்ற பல விடயங்கள் இருக்கின்றன. இன்று அவற்றையெல்லாம் பொறுக்க முடியாமல் தான் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கின்ற வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கின்றன. இந்த வாய்ப்புகளை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் மகிந்தவுக்கு ஆதரவை வழங்க முன்வர வேண்டும் எனவும் கருணா வேண்டுகோள் விடுத்தார். (இ-7)

# தலைமைகளின் தீர்மானத்திலேயே தமிழர்களின் தலைவிதி உள்ளது

## ஆட்சி மாற்றம் குறித்து த.ம.வி.பு

(கொழும்பு)

இன்றைய அரசியல் சூழ்நிலையினை தமிழ் அரசியல் தலைமைகள் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகின்றார்கள் என்பதிலேயே தமிழர்களின் எதிர்கால தலைவிதி காணப்படுகின்றது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, வாவிக்கரை வீதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.


"சிறுபான்மை மக்களின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்நாடு அதள பாதாளத்திற்கு சென்று கொண்டிருப்பதை தடுத்து நிறுத்தும் வகையில் புதிய பிரதமரை தனது அதிகாரங்களை பயன்படுத்தி நியமித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான ஆட்சி இந்த நாட்டுக்கு பொருத்தம் இல்லையென்பதை ஜனாதிபதி நன்கு உணர்ந்தே இந்த முடிவினை எடுத்துள்ளார்.

நல்லாட்சியை அமைத்த போது எதனையெல்லாம் செய்யப்போகின்றோம் என்று தெரிவித்து மக்களிடம் வாக்குகளைப்பெற்றார்களோ எதனையும் செய்யாது மோசடியும் விலைவாசி அதிகரிப்பையுமே இந்நாடு கண்டது.

இந்த அரசியல் மாற்றம் சரியா? தவறா? என வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றாலும் ஏற்பட்டுள்ள இந்த சூழலை சிறுபான்மை அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனை தமிழ் அரசியல் தலைமைகள் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகின்றார்கள் என்பதிலேயே தமிழர்களின் எதிர்கால தலைவிதி காணப்படுகின்றது" என்று அவர் தெரிவித்தார். (இ-7)



இதம் நிறுவனமும் சுழிபுரம் றோட்டறக்ட் கழகமும் இணைந்து நடத்திய சர்வதேச சிறுவர் தினம் காரைநகர் பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி றிக்குன் வீரசேகர, காரைநகர் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் நா.செல்வேந்திரா, காரைநகர் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பிருந்தா இந்திரகுமார், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)



யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய முத்தமிழ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# நிதிமோசடி விசாரணைப் பிரிவில் நாமல் ராஜபக்ஷ நேற்றும் ஆஜர்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது நாமல் ராஜபக்ஷ குட்டை காற்சட்டை அணிந்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தனது முகநூலில் புகைப்படங்களுடன் பதிவிட்டிருந்தார்.

"பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் இன்றும்(2018.10.28) காலை உடற்பயிற்சியை அடுத்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்கு வருகை தந்தோம்" என சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தனது முகநூலில் குறிப்பிட்டிருந்தார். (இ-7)

# பெரும்பான்மை இல்லாமையாலேயே நாடாளுமன்றை ஒத்திவைத்துள்ளனர்

## இம்ரான் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமையாலேயே மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்களின் பங்களிப்பில் எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் மூலம் எங்களிடமே பெரும்பான்மை உள்ளது என நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளோம்.

இந்த ஊடகசந்திப்பே மகிந்த -.மைத்திரி கூட்டணியின் முதல் தோல்வி. இதன் மூலம் ஆட்டம் கண்டதாலேயே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளார்.

அவர்கள் பெரும்பான்மையை பெற எவ்வளவு முயற்சி செய்தாலும் அதை முறியடித்து நாம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்போம்.

அரசியலமைப்புக்கு முரணான வகையில் நியமிக்கபட்டுள்ள பிரதமரை நாம் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களாக ஒன்றிணைந்து வீட்டுக்கு அனுப்பி, ஐக்கிய தேசிய முன்னணியின் தனி அரசாங்கம் ஒன்றை அமைப்போம்.

அதுவரை நாடுமுழுவதிலும் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்களை பொறுமைகாக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

அலரிமாளிகையையும் எமது பிரதமரையும் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் பாதுகாத்து வருகின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் ஆதரவாளர்களுடன் இணைந்து அலரி மாளிகையை பாதுகாப்போம் என தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

## எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரித்தால் வேறுவித பதிலடி தரப்படும்

### பாகிஸ்தானுக்கு ராணுவ தளபதி ராவத் எச்சரிக்கை



(டில்லி)

காஷ்மீரில் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரித்தால் வேறு விதமான பதிலடி தரப்படும்என்று பாகிஸ்தானுக்கு இராணுவ தளபதி பிபின்ராவத் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தரும் விதமாக பாதுகாப்புப் படையினர் மீது இளைஞர்கள் தினமும் கல்வீச்சு தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 26 ஆம் திகதி அனந்த்நாக் மாவட்டத்தில் நடந்த கல்வீச்சில் 22 வயது ராஜேந்திர சிங் என்னும் படை வீரர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதையடுத்து ராணுவ தளபதி பிபின் ராவத் டில்லியில் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது தெரிவித்ததாவது,

பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மீது கல்வீச்சு சம்பவங்கள் நடந்து வருகின்றன. இப்படி கல்வீசி தாக்குதல் நடத்துவதால் எந்த பலனும் கிடைக்கப்போவதில்லை. இதுபோல் தாக்குதல் நடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கல்வீச்சில் ஈடுபடுவோர் மீது இராணுவம் வழக்கும் பதிவு செய்யும். அதேபோல் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஆதரிப்பதை இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்) நிறுத்திக் கொள்ளவேண்டும். 1971ஆம் ஆண்டு நம்மிடம் போரில் தோற்றதன் காரணமாக நமது அண்டை நாடு தொடர்ந்து பனிப்போரில்ஈடுபட்டு வருகிறது.

சட்ட ரீதியாக காஷ்மீர் இந்தியாவின் ஒரு அங்கம். அதை யாரும் எடுத்துக்கொள்ள அனுமதிக்க மாட்டோம்.

காஷ்மீரில் பயங்கரவாதிகள் ஊடுருவலை பாகிஸ்தான் ஆதரிக்கிறது. அதை நாமும் முறியடிக்கிறோம். அதேநேரம் பாகிஸ்தான் தொடர்ந்து இதுபோன்ற செயலில் ஈடுபட்டு வந்தால் வேறு விதமான பதிலடி தரவேண்டியது வரும். இவ்வாறு தெரிவித்தார். (7)

## மோடியின் ஊழல் நிறுத்தப்படும் வரை போராடுவோம் - ராகுல்காந்தி அழைப்பு

(டில்லி)



பிரதமர் நரேந்திர மோடியின் ஊழல் நிறுத்தப்படும் வரையில், எதிர்க்கட்சிகளும்-மக்களும் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போராட வேண்டும் என்று, அக்கட்சியின் தலைவர் ராகுல்காந்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே, மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ள அவர், 'ஊழலுக்கு எதிராகவும் ரஃபேல் விவ காரம் குறித்தும் சி.பி.ஐ.விசாரிப் பதை தடுக்கும் வகையில் மோடி செயற்பட்டுள்ளமைஅநீதியாகும்

இதற்கு எதிராக குரல் கொடுக்க ஆயிரக்கணக்கான இந்தியர்கள் ஒன்றிணைந்துள்ளனர். இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கும்' எனத் தெரிவித்துள்ளார்.

ரஃபேல் போர் விமான கொள்வனவில் பல்வேறு ஊழல் நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளதாக, காங்கிரஸ் தரப்பு தொடர் குற்றச்சாட்டை முன்வைத்து வருகிறது.

இந்த குற்றச்சாட்டை தொடர்ந்து ரஃபேல் தொடர்பில் தகவல் திரட்டியதாக கூறப்படும் சி.பி.. இயக்குநர் மற்றும் சிறப்பு இயக்குநர் திடீர் கட்டாய விடுவிப்பில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் ரஃபேல் தொடர்பான உண்மைகள் வெளிவந்திடும் என்ற அச்சத்திலே தான் சி.பி.ஐ. இயக்குநர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் குறித்த விடயம் அநீதியானது என்றும் கூறி ராகுல்காந்தி தலைமையில் காங்கிரஸ் கடந்த 26 ஆம் திகதி போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில், போராட்டம் நடத்திய ராகுல்காந்தி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், ராகுல் தனது டுவிட்டர் பதிவில் மேற்படி கூறியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஈரான் மீதான பொருளாதாரத்தடைகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

(வோஷிங்டன்)

ஈரான் மீதான சகல பொருளாதார தடைகளும் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் தீவிரமாக அமுலுக்கு வந்து விடும் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனியுடன் ஈரான் வரலாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை 2015ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தை ஈரான் மீறிவிட்டதாக கூறி அமெரிக்கா சில மாதங்களுக்கு முன் அதிலிருந்து விலகியது.

அத்துடன் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானபோது, விலக்கிக் கொள்ளப்பட்ட பொருளாதார தடைகள் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.



மேலும், ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை இந்தியா உள்ளிட்ட எல்லா நாடுகளும் குறைத்துக்கொண்டு, நிறுத்தி விட வேண்டும், அப்படி செய்யாவிட்டால் அந்த நாடுகளும் பொருளாதார தடைகளை சந்திக்க வேண்டியது வரும் எனவும் அவர் எச்சரித்தார்.

இந்த நிலையில் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் ட்ரம்ப் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர், "அணு ஆயுத ஒப்பந்தத்தை தொடர்ந்து, விலக்கிக்கொள்ளப்பட்ட ஈரான் மீதான எல்லா பொருளாதார தடைகளும் மீண்டும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் தீவிரமாக அமுலுக்கு வந்து விடும்" என அறிவித்தார்.

உலகின் முன்னணி பயங்கரவாத நாடு, உலகிலேயே மிக அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துகிற ஆயுதங்களை தயாரிக்க விடமாட்டோம் எனவும் ட்ரம்ப் உறுதிபட மேலும் தெரிவித்தார். (7)

## சிரியாவில் தற்கொ

## பலி எண்ணிக்கை

### நூற்றுக்கும் மே

(டமாஸ்கஸ்)



சிரியாவின் கிழக்குப்பகுதியில் உள்ள அமெரிக்க ஆதரவு போராளிகள் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது.

சிரியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

கிளர்ச்சியாளர்களில் சிலர் அமெரிக்க படைகளுக்கு ஆதரவாக உள்ளனர். அதே நேரத்தில் சிரியா அரசுக்கு ரஷ்யா மற்றும் ஈரான் நாடுகள் ஆதரவாக உள்ளன. சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் தங்கள்

## ஜமாலின் மரண

## சவுதிக்கு ஆயுதங்க

### ஜேர்மன் ஜனாதிப

(வோஷிங்டன்)



ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் மரணத்தின் மீதான மர்மம் தீரும் வரை சவுதிக்கு ஆயுதங்களை விற்க மாட்டோம் என ஜேர்மனியின் ஜனாதிபதி ஏஞ்ஜலா மெர்கல் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் மன்னர் சல்மானின் முடியாட்சியை எதிர்த்து கடுமையாக விமர்சித்து செய்தி வெளியிட்ட ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்டார். இந்த தகவலை அண்மையில் சவுதி அரசு உறுதி செய்தது.

## அமெரிக்காவில் து

## 11 பேர் பலி; 6 பே



# வெளிநாடு

## ாலைப்படைத் தாக்குதல்

## கை 70 ஆக உயர்வு

### மேற்பட்டோர் படுகாயம்



கட்டுப்பாட்டில் வைத்திருந்த பல்வேறு பகுதிகளை அரசு படையினர் மீட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, உள்நாட்டுப் போரால் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ள சிரியா நாட்டில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மீது நேற்றைய தினம் தற்கொலைப் படை தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது. இந்த தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்து இருப்பதால், உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது. (7)

## ஜமாலின் மரணம் வெறித்தனமான ஒரு தேடுதலாக மாறியுள்ளது

### சவுதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

சவுதி ஊடகவியலாளரின் மரணம் தற்போது வெறித்தனமான ஒரு தேடுதலாக மாறியுள்ளதாக சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் அடெல் அல்-ஜுபைர் தெரிவித்துள்ளார்.

பஹ்ரேனில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு மாநாடு ஒன்றில் உரையாற்றிய ஜுபைர், ஊடகவியலாளர் கசோக்கியின் விவகாரம் அமெரிக்காவுக்கும் ரியாத்துக்கும் இடையிலான உறவில் இரும்புத்தாது பூசப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 2 ஆம் திகதி ஊடகவியலாளர் கஷோக்கி துருக்கியின் சவுதி அரேபிய துணைத் தூதரகத்தில் வைத்து கொலை செய்யப்பட்டமை இந்த சூழ்நிலையில் உலகளாவிய அழுத்தத்தை தீவிரப் படுத்தியுள்ளது.

அத்துடன், மேற்குலகிற்கு சவுதி அரேபிய இராச்சியத்தின் மீதான நம்பிக்கையை சீர் குலைத்துள்ளது. இந்தநிலையில், சவுதியின் எதிர்வழக்கு தொடரப்படும் என்றும் அதற்கு சில கால அவகாசம் அவசியம் என்றும் வெளிவிவகார அமைச்சர் அடெல் அல்-ஜுபைர் கூறினார்.

இதேவேளை, இஸ்ரேல் பாலஸ்தீனம் தொடர்பில் சவுதி அரேபியாவின் நிலைப்பாடு குறித்து வலியுறுத்திய அவர், இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பு நிலைப்படுத்துவதற்கு சமாதானமே ஒரே வழிவகையாக இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## ஐக்கிய அரபு நாட்டில் இம்ரான்கான் தங்கைக்கு பினாமி சொத்துக்கள்

### உச்ச நீதிமன்றில் அறிக்கை தாக்கல்



(இஸ்லாமாபாத்)

ஐக்கிய அரபு நாட்டில் இம்ரான்கான் தங்கைக்கு பினாமி பெயரில் சொத்துக்கள் இருப்பது தெரிய வந்துள்ளதையடுத்து அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தவர்கள் மற்றும் வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்கி குவித்தவர்கள் குறித்து விசாரணை நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதுகுறித்து பெடரல் புலனாய்வு குழு விசாரணை நடத்தியது. அதன் அறிக்கை உச்ச நீதிமன்றில் தலைமை நீதிபதி ஷாகிப் நிசார் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் தங்கை அலீமாகான் பெயரும் இடம் பெற்றுள்ளது. இவர் ஐக்கிய அரபு நாட்டில் பினாமி பெயரில் சொத்துக்கள் வாங்கி குவித்துள்ளார்.

அதைத்தொடர்ந்து அவருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டது.

அப்போது வீட்டில் அலீமா கான் இல்லை. அவர் வெளிநாடுசென்றுவிட்டதாகவேலைக்கார பெண் தெரிவித்தார்.

இவர் தவிர பாகிஸ்தானை சேர்ந்த மேலும் 44 அரசியல்வாதிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் ஐக்கிய அரபு நாடுகளில்பினாமி பெயரில் சொத்துக்கள் வாங்கி இருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ன மர்மம் தீரும் வரை ங்களை விற்க மாட்டோம்

### ாதிபதி உறுதி



இதனை அடுத்து, சவுதிக்கு அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளும் அழுத்தம் கொடுக்க தொடங்கியுள்ளது. ஊடகவியலாளரின் மரணத்துக்கு முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக செக் குடியரசின் பிரதமர் ஆண்ட்ரெஜ் பேபிஸ் உடன் ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்ஜலா மெர்கல் செய்தியாளர்களை நேற்றையதினம் சந்தித்தார்.

இப்போது, ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலை குறித்து முழுமையான விசாரணை நடத்தி, கொலையில் உள்ள மர்மங்கள் நீக்கப்படும் வரையில் சவுதி அரேபியாவுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்யப்போவது இல்லை என தெரிவித்துள்ளார். (7)

## துப்பாக்கிச்சூடு

## பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் நகரிலுள்ள வழிபாட்டு தலமொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் பலியாகியுள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் பென்சில் வேனியா மாகாணத்தில் உள்ள பிட்ஸ்பர்க் நகரில் ட்ரீ ஒப் லைப் என்ற யூத வழிபாட்டுத்தலத்தில் நேற்று முன்தினம் குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.



வழிபாட்டுக்கு என அப்பகுதி யில் மக்கள் ஒன்று கூடியிருந்த நிலையில், மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியுடன் வந்து சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் பலியாகி உள்ளதுடன் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸார் பதிலுக்கு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மர்ம நபர் காயமடைந்த நிலையில், பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

அனைத்து யூதர்களும் மரணிக்க வேண்டும்" என சத்தமிட்டவாறு குறித்த மர்மநபர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## அமெரிக்க பிரமுகர்களுக்கு வெடிகுண்டுப் பொதிகள் அனுப்பிய சந்தேகநபர் புலனாய்வுத்துறையால் கைது

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மிக முக்கிய பிரமுகர்களுக்கு அனுப்பப்படும் அஞ்சல் பொதிகளை புலனாய்வுத் துறை பொலிஸார் பரிசோதித்த பின்னரே அவர்களிடம் ஒப்படைக்கப்படுவது நெறிமுறையாகும்.

அந்த வகையில், முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரும் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப்பை எதிர்த்து போட்டியிட்ட வருமான ஹிலாரி கிளிண்டன் ஆகியோரின் அலுவலக முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட வெடிபொருள் பொதிகளை இடைமறித்து அமெரிக்க உளவுத்துறையினர் கைப்பற்றியிருந்தனர்.

இவர்கள் மட்டுமன்றி, ஜனநாயக கட்சியின் முக்கிய தலைவர்கள் மற்றும் ஹொலிவுட் நடிகருக்கும் இதுபோன்ற அஞ்சல்பொதிகள்அனுப்பப்பட்டன.

இதையடுத்து இந்த விவகாரத்தில் தீவிரமாக தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்த பொலிஸார் 56 வயதான சீசர் சயோக் என்பவரை கைது செய்துள்ளனர்.

வெடிகுண்டு பொதியொன்றில் இருந்த இவரது கைரேகையை வைத்து இவரை கைது செய்துள்ளதாக எப்.பி.ஐ. இயக்குநர் கிறிஸ்டோபர் தெரிவித்துள்ளார்.

இவர் மீது வெடிபொருள் கடத்தல், சட்டவிரோதமாக வெடிமருந்துகளை அஞ்சல் மூலமாக அனுப்புதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 58 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்என்றுநம்பப்படுகிறது.

மேலும், இவரை கைது செய்ததன் மூலம் இந்த பிரச்சினை முடியாது என்றும், தொடர வாய்ப்பு இருப்பதாகவும் கிறிஸ்டோபர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## காஸாவில் இலக்குகள் மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல்

(காஸா)

காஸாவில் உள்ள நூற்றுக் கணக்கான இலக்குகள் மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை தொடக்கம் எல்லைப்பகுதி வழியாக கடுமையான தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் பாலஸ்தீன போராளிகள் எல்லையைக் கடந்து தங்களின் பளுவான எறிகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி வந்தனர்.

எனினும், இஸ்ரேல் மற்றும் காஸாவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஹமாஸ் போராளிகளின் பகுதிகளில் இருந்து நடத்தப் பட்ட பதில் தாக்குதல்களின் விளைவாக உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நான்கு பாலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர் களை எல்லைப்பகுதிக்கு அருகில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கொலை செய்தமைக்கு பதிலடியாக தாமும்றொக்கெட் தாக்குதலை மேற் கொண்டதாக ஹமாஸ் இயக்கம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது. எவ்வாறாயினும், இஸ்ரேலும் இதேபோன்ற செயற்பாட்டையே மேற்கொள்வ தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ் ரேல் படையினர் தரப்பில் வெளியிடப் பட்டுள்ள காணொளியொன்றில் காஸா நகர் பகுதியில் உள்ள பல மாடிக்கட்டடங்களும், ஹமாஸ் தலைவர் கள் மற்றும் செயலக கட்டடங்கள் என்பன எறிகணைத் தாக்குதல்கள் மூலமாக நிர் மூலமாக்கப்பட்ட காட்சிகள் பதிவாகியுள்ளன. (7)

# என்னைக் கொல்லும் சதி முயற்சியில் சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு

## ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னைக் கொலை செய்வதற்கான சதிமுயற்சி காரணமாகவே மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஆட்சியமைக்க திட்டமிட்டதாக தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும் பொது எதிரணியினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

என்னைக் கொல்வதற்கான சதி முயற்சிகள் காரணமாகவே நான் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்கத் தீர்மானித்தேன் என அவர் தெரிவித்தார்.

என்னைக் கொல்வதற்கான சதி முயற்சிகள் குறித்த விசாரணைகளின் போது முன்னாள் இராணுவ தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகாவிற்கு தொடர்புள்ளமை குறித்த விபரங்கள் வெளியாகியிருந்தன. எனினும் அரசியல் தலையீடுகள் காரணமாக அதனை மறைத்துவிட்டனர் என மைத்திரி தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் போது வேறு சில முக்கிய நபர்களுக்கும் தொடர்பிருப்பதும் தெரியவந்தது என தெரிவித்துள்ள மைத்திரிபால விசாரணைகள் இடம்பெறுவதால் நான் மேலதிக விபரங்களை வெளியிட விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

முழுமையான விபரங்கள் தெரியவரும்போது மக்கள் அதிர்ச்சியடைவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படுமென மைத்திரி-மகிந்த உறுதி

## தொண்டமான் தகவல்



(கொழும்பு)

தொழிலாளர்களுக்கான சம்பள பிரச்சினை தீர்க்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மகிந்த ராஜபக்ஷவும் உறுதியளித்துள்ளதாக தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

விஜயராமவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய கூட்டணி மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன-மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உறுதியளித்துள்ளனர். மலையகத்தில் உள்ள சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது" எனத் தெரிவித்தார்.

மேலும், இதன்போது ஊடகவியலாளர் ஒருவரால் "இந்த அடிப்படை சம்பளத்தை கம்பனியாலேயே நிர்ணயிக்க முடியும். இந்த பிரச்சினையை உங்களால் எப்படி தீர்க்க முடியுமென நம்புகின்றீர்கள்?" என கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த ஆறுமுகன் தொண்டமான் "அதற்கு வழி உண்டு. ஆகையால்தான் இதை செய்யமுடியும் என்ற தலைவர்களை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். இதனை நாங்கள் செய்து காட்டுவோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# தொழிலாளர்களுக்காக ஆசிரியர் சமூகம் ஒன்றிணைந்த மோட்டார் சைக்கிள் பேரணி!






தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை வேதனத்தை 1000 ரூபாவாக உயர்த்தக் கோரி மலையக ஆசிரியர் சமூகம் ஒன்றிணைந்து மோட்டார் சைக்கிள் பேரணி ஒன்றினை மேற்கொண்டுள்ளது.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் முன்பாக ஆரம்பித்த குறித்த பேரணியானது பத்தனை கொட்டக்கலை பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களோடு ஒன்றிணைந்து ஹற்றன் நகரின் மணிக்கூட்டு கோபுரம் வரை சென்றது.

குறித்த பேரணியில் 70க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதியின் தேவைக்கேற்ப

# பொலிஸ்மா அதிபர் பூஜிதவை நீக்க ஐ.தே.க.ஒத்துழைக்கவில்லையாம்

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரை நீக்கும் தேவை ஜனாதிபதிக்கு இருந்த போதிலும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, டாலி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதியை கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு பல தகவல்கள் கிடைத்தன.

அவற்றை தற்போது வெளியிட முடியாது. இவை தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில், ஜனாதிபதிக்கும் அச்சமும் அதிருப்தியும் ஏற்பட்டிருக்கக் கூடும்.

இருந்த நல்லாட்சி அரசாங்கத்தை விட, நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது" எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கை நழுவிப் போகும் காலம்

வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும் நேரமும்.

இப்படிப் போனால் போனதுதான் என்றிருக்கும் காலத்தை நாம் எவ்வளவு உணர்ந்து சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் தெரியுமா?

தொலைபேசி என்றும் ஊர்வலம் என்றும் ஊர்வம்பு.அக்கப்போர் என்றும் தேவையற்ற விடயங்களில் தலையிட்டும் நேரத்தை எவ்வளவு வீணாக்குகிறோம்?

விருந்தினர்களை வரவேற்றும் நாம் பிறர் வீட்டிற்குப் போயும் விசேஷம் என்றும் விழா என்றும் மணிக்கணக்கில் நேரத்தைச் செலவழிக்கிறோம்-இல்லையில்லை-கொல்லுகிறோம்.

இவற்றையெல்லாம் காலவிரயம்-வீண் வேலை என்று நான் வாதிட முன்வரவில்லை.எதற்கும் ஓர் எல்லை வேண்டும்.

'நான் பத்து மணிக்கு ஆபிஸ் போகிறேன். ஆறு மணிக்குத் திரும்புகிறேன் மீதி நேரத்தை என்ன செய்ய? நேரத்தை எப்படிப் போக்குவது நான்?எனக்குப் போரடிக்கிறதே' என்று வாதிடுபவர்களுக்கு ஒரு சில கேள்விகள்.

உங்களுக்கென்று ஏதும் இலட்சியங்கள், ஆசைகள் இருக்கலாம். அவற்றை நோக்கி உறுதியாக முன்னேறுவது எப்படி என்று நீங்கள் திட்டமிட்ீர்களா?

போரடிக்கிறது எனச் சொல்லும் நீங்கள்,உங்கள் குடும்ப நலனுக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?

வருமானம் போதவில்லை என்கிற நிலை நிலவுமானால் அதைப் பெருக்க என்ன வழிவகுத்திருக்கிறீர்கள்?

காலத்தைச் சுயநல நோக்கில் பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்பதில்லை.உங்களுக்குப் போகாத பொழுதை மற்றவர்களின் நன்மைக்காகச் செலவிட்டால் உங்களைச் சுற்றி எவ்வளவு இனிமையான சூழ்நிலை உருவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள். நீங்கள் காண விரும்பும் ஒரு வெளியூர் நபர், இருக்கிறாரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாமல் புறப்பட்டுப் போவதில் எவ்வளவு பொருள் விரயம் எவ்வளவு கால விரயம்?

தகவல் தொடர்புகளில் கவனம் செலுத்தாமை,திட்டமிடப்படாத-வரையறை இல்லாத நடைமுறைகள்,எதற்கு முக்கியத்துவம் தருவது எனத் தெரியாத தெளிவற்ற நிலை.மூளையைச் சரிவரப் பயன்படுத்தாமை ஆகியவற்றால் எவ்வளவு கால விரயங்கள் ஏற்படுகின்றன!

காலம் என்பது ஓர் அற்புதமான இயந்திரம்.அதைச் சரிவர இயக்கிப் பயன்படுத்துபவர்கள் அதைக் காசாக்குகிறார்கள். சிலர் அதைக்கொண்டு நற்பெயரைச் சம்பாதித்துக்கொள்கிறார்கள்-வாழ்க்கையில் உயர்கிறார்கள்.

சரிவரப் பயன்படுத்தாதவர்களோ அதைத் துருப்பிடிக்க விட்டுவிட்டு விதியைப் போய் நொந்து கொள்கிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# ஒட்டுமொத்த தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திய மாற்றம்!

## மகிந்த பிரதமராக நியமிக்கப்பட்டமை குறித்து ஸ்டாலின்

(சென்னை)



**ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை தாக்குதல் நடத்தி வேட்டையாடிய மகிந்த பிரதமராக நியமிக்கப்பட்டு இலங்கையில் அரங்கேறியிருக்கும் அரசியல் மாற்றங்கள் ஒட்டுமொத்த தமிழர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக, தி.மு.க. தலைவரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ, தமிழர்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களை மத்திய அரசு செய்யக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசில் நடக்கும் மர்மங்களும், ராஜீவ் கொலையில் தண்டனை அனுபவித்து வரும் ஏழு தமிழர் விடுதலை தள்ளிப் போவதும், இந்திய அரசின் கவனத்திற்கு அப்பாற்பட்டதா எனக் கேள்வியெழுப்பிய மு.க.ஸ்டாலின், தமிழர் நலனுக்கு ஊறுவிளைவிக்கும் எத்தகைய செயற்பாடுகளையும் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ பா.ஜ.க. அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, இலங்கையின் சட்டவிதிகளுக்குப் புறம்பாகவும், அறுதிப் பெரும்பான்மை இல்லாமலும் மகிந்தவை பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியது.

இதேவேளை, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தான் பதவியில் நீடிப்பதாக தெரிவித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கை அரசில் நடைபெற்றுள்ள இந்தத் தலைகீழ் மாற்றங்கள், ஈழத்தில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமன்றி, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் பதற்றத்தையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தில் தமிழர்கள் மீது இனப்படுகொலை தாக்குதல் நடத்தி வேட்டையாடிய மகிந்த ராஜபக்ஷ, தமிழ்நாட்டு மீனவர்கள் மீதும், இலங்கைக் கடற்படையை வைத்து துப்பாக்கிச் சூடுகளை நடத்தியவர்.

இவை குறித்து, போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும்என சர்வதேச அமைப்புகளில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் நடத்திய டெசோ மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கையில் நடந்த இனப்படுகொலைகள் குறித்து முழுமையாகவும் சுதந்திரமாகவும் விசாரணை நடத்தி, அதற்குரியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தலைவர் கலைஞரின் உத்தரவுப்படி, ஐ.நா. மன்றத்தில் நேரில் சென்று அளித்துள்ளேன்.

தமிழர்கள் வெகுகாலமாக நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், அநீதியான முறையில் மகிந்த திடீரென பிரதமராகப் பொறுப்பேற்றிருப்பது, ஈழத் தமிழர்கள் நெஞ்சில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வருகை தந்து பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார். அதுபோல, ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுக்கு வருகை தந்தார்.

மகிந்தவின் வருகை யின்போது, அரசியல் காழ்ப்புணர்வுடன் பேட்டிகள் மற்றும் செய்திகள் வெளியிடப்பட்டன.

அதே சூழலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொல்வதற்கு இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்புத் திட்டமிட்டிருப்பதாக இலங்கையில் செய்திகள் வெளியாயின. பின்னர் மறுப்பறிக்கையும் அவசரமாகத் வெளியிடப்பட்டது.

எனினும், இது தொடர்பாக அந்நாட்டில் கைது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவை மையப்படுத்தி இலங்கை அரசியல் பிரமுகர்களின் பயணங்களும் குற்றச்சாட்டுகளும் வெளியான நிலையில், பிரதமர் பொறுப்பில் ரணில் விக்கிரமசிங்க நீடிக்கும் நிலையிலேயே, பெரும்பான்மை பலம் இல்லாத மகிந்த ராஜபக்ஷ திடீர் பிரதமராகப் பொறுப் பேற்றிருப்பதன் பின்னணி, தமிழர்களுக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.

இலங்கை தொடர்பான வெளிநாட்டு உறவு மற்றும் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நடக்கும் பனிப்போரின் பின்னணியில், இலங்கை அரசில் இந்த திடீர் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதாக, ஆங்கில ஊடகங்களும் அயல்நாட்டு செய்தி நிறுவனங்களும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன.

இத்தகைய நிலை தொடருமானால், அது இந்தியாவின் எதிர்கால நலன்களுக்கு சவாலாக அமையும் ஆபத்து உண்டு என்ற கவலையும் பிரதமருக்கு தெரியப்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

ஒரே இரவில் இலங்கை அரசில் நடந்துள்ள மாற்றங்கள் பல மர்மங்களை உள்ளடக்கிய நிலையில், அவை அனைத்துமே வாழ்வுரிமை மறுக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வதைபடுகின்ற ஈழத்தமிழர்களுக்கு பெரும் அச்சுறுத்தலை உண்டாக்கியுள்ளன. அதுபோலவே தமிழக மீனவர்களையும் கவலை கொள்ள வைத்துள்ளது.

எனவே இந்தியாவை ஆளும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசும், அதன் வெளியுறவுத் துறையும், தமிழர்கள் நலன் கருதியும் இந்திய குடிமக்களான தமிழக மீனவர்களின் பாதுகாப்பு கருதியும் இலங்கை அரசியல் பிரமுகர்களின் இந்திய வருகை குறித்தும், றோ உளவுப் பிரிவு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்தும் தெளிவுபடுத்திட வேண்டும்.

தமிழர்கள் நலன் சார்ந்த எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதில் மத்திய அரசு தொடர்ந்து அலட்சியம் காட்டி வரும் நிலையில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் 27 ஆண்டுகளுக்கு மேல் சிறைப்பட்டிருக்கும் 7 பேரையும் விடுவிக்க தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி, அதனை மத்திய அரசின் பிரதிநிதியான தமிழக ஆளுநருக்கு அனுப்பி இத்தனை காலம் கடந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு விடுக்கப்பட்ட சவாலாகத் தெரிகிறது.

ஆளுநர் இனியும் காலம் தாழ்த்தாமல், 7 பேர் விடுதலை குறித்த தமிழக அமைச்சரவை தீர்மானத்தின் மீது சாதகமான முடிவினை எடுத்திட வேண்டும் என வலியுறுத்துகிறேன். இதன் மீது மத்திய அரசும் கவனம் செலுத்திட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஈழத்தமிழர்களின் எதிர்காலக் கனவை குழிதோண்டி புதைத்து விட்டார் மைத்திரி

## பா.ஜ.க. மூத்ததலைவர் இல.கணேசன் கவலை

(சென்னை)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஒரே இரவில் பிரதமராக்கியதன் மூலம், ஈழத் தமிழர்களின் எதிர்காலக் கனவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழி தோண்டி புதைத்துவிட்டதாக, பா.ஜ.கவின் மூத்த தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கிய, பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் இலங்கைக்கு விஜயம்செய்த போது, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய கருத்துக்கள் மற்றும் தமிழர் வாழ் பிரதேசங்களின் மாற்ற நிலைமைகள் மகிழ்ச்சியளித்ததாகவும், ஆனால் தற்போது அந்த ஒளிமயத்தை சிதைக்கும் வகையில், அரசியலில் இவ்வாறான தொரு மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும், இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் உள்நாட்டு விடயம் தொடர்பில் பேசுவது தவறு என்றாலும், அங்குள்ள தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற ரீதியில் கவலையையும், அதிர்ச்சியையும் வெளிப்படுத்தும் அதிகாரம் தமக்குள்ளதாகவும் தெரிவித்தார்.



மேலும் தமிழ் மக்களின் வெறுப்புக்குரியவராக முத்திரை குத்தப்பட்ட மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியுள்ளமை, தன்னை ஜனாதிபதியாக்கிய தமிழ் மக்களுக்கு, மைத்திரிபால சிறிசேன செய்யும் துரோகம் என்றும் தெரிவித்துள்ளார்.

குறித்த அரசியல் மாற்றமானது, ஈழத் தமிழர்களுக்கு மட்டுமின்றி, இந்தியத் தமிழர்களிடையேயும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழர்களின் உயிருக்கு பாதுகாப்பு வேண்டும்

## தமிழிசை வலியுறுத்து

(சென்னை:)

இலங்கையில் தமிழர்கள் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிகாகோ நகரிலுள்ள தனியார் அமைப்பு, தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு இந்தியாவில் வளர்ந்து வரும் நட்சத்திரம் என்ற விருதை வழங்கவுள்ளது.

இதற்காக அமெரிக்கா புறப்பட்டபோது நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மருத்துவம், சமூகம், சவாலான சூழ்நிலையில் பணியாற்றும் தலைவர் என்ற அடிப்படையில், இந்த விருது



க்கு தான் தேர்வு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.


இலங்கையில் தமிழர்களின் உயிருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தவிதத்திலும் தமிழர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் எந்தப் பாதிப்பும் வந்துவிடக் கூடாது எனவும் தமிழிசை வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தை நினைவுபடுத்திய மகிந்தவின் நியமனம்

## -இந்திய மத்திய இணை அமைச்சர் இராதாகிருஷ்ணன்-

(புதுக்கோட்டை)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம ராகப் பதவியேற்றுள்ளமை யானது 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தை நினைவுப் படுத்துவதாக அமைந்துள்ளதாக இந்திய மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்



புதுக்கோட்டை தூவார் கிராமத்தில் வைத்து நேற்று ஊடகவியலாளர்களைச் சந் தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இருப் பினும் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற நிலைமை இலங்கை தமி ழர்களுக்கு இனி ஒரு போதும் ஏற் படாதென நம்பு வதாகவும் அவர் தெரிவித் தார்.

மேலும் பா.ஜ.க அரசு ஆட்சியில் உள்ளதால் இலங் கைத் தமிழர்கள் எந்த வகை யிலும் அச்சப்படத் தேவை யில்லை எனவும் பொன். இராதாகிருஷ்ணன் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

இதேவேளை இலங்கை யில் இடம்பெற்ற யுத்தத்தில் குற்றவாளியாக காங்கிரஸ் கட்சி காணப்படுகின்றது.

ஆனால் காங்கிரஸோ அதனுடன் கூட்டணி அமைத்துள்ள தி.மு.கவோ இன்னும் இவ் விடயம் தொடர்பில் பதிலளிக்க வில்லை எனவும் அவர் மேலும் குற்றம் சுமத்தியுள் ளார். (இ-7)

# முன்பு செயற்பட்டதைப் போன்று மகிந்த இனி செயற்பட மாட்டார் கமல்ஹாசன் நம்பிக்கை



(சென்னை)

புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவை நான் வர வேற்கவில்லை. ஆனால் அவர் முன்னைய ஆட்சி யில்செயற்பட்டதைப்போன்று செயற்படமாட்டாரென நம் புகின்றேன் என மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசன் தெரிவித்துள் ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த பிரதமராக வந் துள்ளமையால் அவர் தமி ழர்களுக்கு நன்மை செய்ய மாட்டார்என்று யாரும்எண்ண வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஏனைய நாடுக ளின் அரசியல் விவகாரத் தில் தலையீடு செய்வது சிறந் ததில்லையெனவும் கமல் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமிழகத் தில் 20 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் வந்தால் நிச்சயம் போட்டியிடுவோ மெனவும் அவர் தெரிவித் துள்ளார். (இ-7)



# வெலிகந்தவில் இடம்பெற்ற பாரிய விபத்தில் 27 பேர் காயம்!

(பொலநறுவை)

பொலநறுவை மட்டக் களப்பு வீதியில்நேற்று (ஞாயிற் றுக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் 27 பேர் காய மடைந்துள்ளனர்.

பொலநறுவை மட்டக் களப்பு வீதியின் வெலிகந்த பிரதேசத்தில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

வெலிகந்தவிலிருந்து பொலநறுவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தியும், கொழும் பிலிருந்து திருக்கோண மலை நோக்கி பயணித்து கொண்டிருந்த பேருந்துமே இவ்வாறு விபத்துக்குள் ளாகின.

இதன்போது காயமடை ந்தவர்கள் வெலிகந்த வைத் தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இச்சம்பவம் குறித்து வெலிகந்த பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத் துள்ளனர். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## பிறப்பு எண் 8 விதி எண் 8

முழு சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் செயற் கரிய செயல்கள் செய்யும் பராக்கிரமசாலிகள். பல விதப் போராட்டங்களைக் கடந்து உயர்ந்த நிலையை அடைவார்கள். தனது குடும்பமும் சமூகமும் முன்னேற அயராது உழை ப்பார்கள். அனைவரும் இவர்களிடம் மதிப்பும் மரி யாதையும் வைத்திருப்பார் கள். உறுதியான உடல மைப்பு உடையவர்கள். உடல்பலமும் மனபலமும் உடையவர்கள். இளமை யில் போராடிப் பருவ வயது தாண்டிய பிறகு பல அதிர் ஷ்டங்களைப் பெறுவார் கள். இவர்களின் பேச்சும் எழுத்தும் ஆற்றல் மிக் கவை. மிகவும் கடினமான உழைப்பாளிகள். நல்ல நண்பர்கள் இவர்களைச் சுற்றிலும் காணப்படுவார் கள். இவர்களுக்குத் துன் பத்தில் உதவப் பலபேர் முன்வருவார்கள்.

எதிரிகளை அடக்கியா ளும் சக்தி படைத்தவர்கள். ஜனவசிய சக்தி படைத்த வர்கள். மூளை பலமிக்க வர்கள். கலை, ஓவியம், காவியம், சினிமா போன் றவற்றில் சிறப்படைவார் கள். அஷ்டமா சித்திகளும் கைகூடும். உறங்கும் சமூ கத்தைத் தட்டியெழுப்பி செயற்படச் செய்வார்கள். உரிமைக்காகக் குரல் கொடு ப்பவர்கள். நியாயத்தின் தலைவனாக இருப்பார் கள். பொது அறிவு, சட்ட நுணுக்கங்கள் அறிவார் கள். நற்பண்புகள், தர்ம குணம் வாய்ந்தவர்கள். உத்தமர்கள். மக்கள் மத் தியில் மகான்களாவார்கள்.

ஸ்திரமான மனதுடன் நடந்து கொள்வார்கள். பலர் உயரமாக பருத்த சரீரத்து டன் மிதந்த கண்களுடன் காணப்படுவார்கள். சிலர் மெலிந்த தேகமுடைய நபர் கள். ஓடோடி உழைப்பார் கள். நரம்பு சக்தி அதிகமி ருக்கும். நல்ல பலசாலிகள். மனதிடம் கொண்டவர்கள். சிலநேரங்களில் மனக்குழ ப்பத்தால் செய்வதறியாது செய்வார்கள். தன் வாழ்க் கைப் போராட்டத்தையும் இடர்பாடுகளையும் பற்றிக் கவலை கொள்ளாது சளைக் காது உழைத்துப் போராடி வெற்றி பெறுவார்கள். தன் குடும்ப நபர்களுக்கும் நண் பர்களுக்கும் உதவிகள் பல செய்ய முன்வருவார்கள். எனவே மற்றவர்களிடம் இவர்களுக்கு மரியாதை இருக்கும். விதி என்னைச் சதா சதி செய்கின்றது என்று கூறுவார்கள். தனிமையை அதிகம் விரும்புவார்கள். இசையில் நாட் டமிருக்கும். சுறுசுறுப்பாக இயங்குவார் கள். மற்றவர்களுக்கு அடங் காமல் மற்றவர்களை அட க்கியாள்வார்கள். இவர்க ளுக்கு மறைமுக எதிர்ப் புகள் இருந்த போதும் அவைகளை வென்று வீழ்த் திடுவார்கள். வாழ்க்கைப் பாதையில் ஒரு பிரச்சினை முடிந்து விட்டால் அடுத்த பிரச்சினை என்று வந்து கொண்டே இருக்கும். படிப்படியாக முன்னேறு வார்கள்.

ஒவ்வொரு முன்னேற்றத்




திற்கும் பெரிதும் பாடுபடு வார்கள். உடல்பலத்தைவிட மனபலமே இவர்களுக்குத் துணைநிற்கும். தனிமையில் உல்லாசமாக சுற்றி வரு வதை விரும்புவார்கள். மருத்துவம், அரசியல், சட் டம், ஆன்மீகம், பொருளா தாரம், சினிமா, இயக்கம் போன்ற துறைகளில் சிறப் பாகப் பணியாற்றுவார்கள். புத்தகப் பிரியர்கள். எந்நே ரமும் சிந்தனையிலேயே மூழ்கி இருப்பார்கள். வாக்கு பலமிக்கவர்கள். எதிரியை வீழ்த்தக் கூடியவர்கள். வாதாடும் திறனுடையவர் கள். பணவிடயத்தில் கண் டிப்பு மிக்கவர்கள். நேர் மையாகவும் புத்திசாலித்த னமாகவும் நடந்து கொள் வார்கள். உதவி கேட்பவர் கள் யாராக இருந்தாலும் தாராளமாக உதவிகள் செய்வார்கள். அஞ்சா நெஞ்சமும் மன தைரிய மும் மிக்கவர்கள். காரிய சித்தியடைவார்கள். அனை வரிடமும் ஒத்துப் போவா ர்கள். ஏதாவது ஒரு வழி யில் புதுமைகள் செய்து கொண்டேயிருப்பார்கள். குழந்தைகளிடம் பாச மிக்கவர்கள்.

வீண்பேச்சால் பகை யைச் சம்பாதிப்பார்கள். பேச்சில் கவனம் தேவை. நல்ல அனுபவசாலிகள். ஆடம்பரத்தை ஒருபோ தும் விரும்ப மாட்டார்கள். இயற்கை, மலர்கள், மலைகள், நீர் வீழ்ச்சிகள், பறவைகள் போன்றவற் றின் மீது அதிகமான ஆர் வம் உடையவராக இருப் பார்கள். தன்மீது அன்பு கொண்டவர்கள் யாராக இருந்தாலும் நிறைய செலவுகளை அவர்களு க்குச் செய்வார்கள். எதி லும் முன்னெச்சரிக்கைக் குணமுடையவர்கள். அதிர் ஷ்டக் குறிப்புகளை முறை யாகக் கையாண்டு வந் தால் அதிர்ஷ்டமான வாழ் க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள் 1,10,19,28,6,15,24,5, 14,23.

துரதிர்ஷ்ட திகதிகள் 8,17,26,4,13,22,31.

அதிர்ஷ்ட நிறங்கள் வெளிர்நீலம், மஞ்சள், பொன்நிறம், வெளிர்பச்சை, வெள்ளை.

துரதிர்ஷ்ட நிறங்கள் கறுப்பு, சிவப்பு, இரு ண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள் நீலக்கல், நீல அக்கோ மரின்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

82



போர்த்துக்கீசர் மன்னாரில் கட்டிய கோட்டை

> 1543 இல் முதன்முதல் போர்த்துக்கீசரின் யாழ்ப்பாணத் தொடர்பும் 1560களில் யாழ்ப்பாண அரசனிடமிருந்து திறைபெற்ற நிகழ்வுகளும் 1561 இல் மன்னாரில் தமது கோட்டையைக் கட்டித் தமது மேலாண்மையை நிலைநிறுத்திய நிகழ்வுகளும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வருமானத்தை வெகுவாகப் பாதித்தன

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

கோவாவிலிருந்தும் லிஸ்பனிலிருந்தும் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் விளைவாக 1623 இல் பிறெயிற்றாஸ் த கமறா (Freitas de Camera) என்ற வருமான அதிகாரி யாழ்ப்பாணம் சென்றடைந்தார்.

எட்டு மாதங்களில் யாழ்ப்பாணத்திற்கான காணிப் பதிவேடும் நிலுவைப் பட்டியலும் பூர்த்தியாக்கப்பட்டன. 1627 இல் தளபதி ஒலிவேறா மரணமடைந்ததைத் தொடர்ந்து லங்கறோட் த செயிஸாஸ் புதிய யாழ்ப்பாணத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவ்வேளையில் தோம்பு வேலைகளைத் தொடங்க மீண்டும் பிறெயிற்றாஸ் யாழ்ப்பாணம் சென்றபோதும் அவனால் அதனைப் பூர்த்தியாக்க முடியவில்லை. இறுதியாக 1635 இல் புதிதாக நியமிக்கப்பட்ட வருமான அதிகாரி அமறோ றொயிஸ் (Amaro Roiz) யாழ்ப்பாணத்திலிருந்து பழைய ஒலைச்சுவடிகளைத் தேடியெடுத்து உள்ளூர் அதிகாரிகளினது உதவியைப் பெற்று 7 மாதகாலமாக விபரங்களைத் திரட்டினான்.

இறுதியாக இரண்டாவது தடவை 1637 இல் யாழ்ப்பாணம் சென்று தோம்பு வேலையை மிகவும் ஒழுங்காகச் செய்து முடித்தான். இத்தோம்பில் இருந்து எவ்வளவு வருமதிகள் நிலுவையாக இருக்கின்றன.

யார் யார் காணிச் சொந்தக்காரர்கள், காணிகளின் தன்மைகள், அளவுகள், என்னென்ன பயிர்ச்செடிகள், மரங்கள் போன்ற பல்வேறு விபரங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. போர்த்துக்கீசரின் வருமானத்தை அதிகரிப்பதற்கு தோம்பு பெருமளவு அவர்களுக்கு உதவியது.

ஆறு தொகுதிகளாக இத்தோம்பு தயாரிக்கப்பட்டது. இவற்றில் இரண்டு தொகுதிகள் வலிகாமத்திற்கும் ஏனைய தொகுதிகள் தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி என்பவற்றிற்கு உரியனவாகவும் ஆறாவது தொகுதி தீவுப்பகுதிகளுக்காகவும் காணப்பட்டன.

வன்னியும் மன்னாரும் இவற்றில் அடங்கவில்லை. மேலும் 1645 இல் முழு யாழ்ப்பாணத்திற்குமான நிலுவைப் பட்டியல் ஒன்று பூர்த்தியாக்கப்பட்டது. இவ்வாண்டிலிருந்து இந்நில அறிக்கைகளின் பொறுப்பு வருமான அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. இன்றைய நிலையில் அவ்வாறான ஒரு விபரமான அறிக்கை தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுக்கு மிக உகந்ததாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அத்தோம்பு டச்சுக்காரரினால் எரிக்கப்பட்டு விட்டது. ஆனால் அதன் நிலுவைப் பட்டியல் லிஸ்பனில் உள்ள ஆவணக் காப்பகத்தில் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இருந்த பொருளாதார நிலைமைகளைப் பற்றி ஆராய்வது பொருத்தமானதாக அமையும். இதற்கு முன்னைய அத்தியாயத்தில் 1500 கள் வரையிலான காலப்பகுதிகளில் யாழ்ப்பாண, வன்னியரசுகளின் பொருளாதார நிலைமைகள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

1543 இல் முதன்முதல் போர்த்துக்கீசரின் யாழ்ப்பாணத் தொடர்பும் 1560களில் யாழ்ப்பாண அரசனிடமிருந்து திறைபெற்ற நிகழ்வுகளும் 1561 இல் மன்னாரில் தமது கோட்டையைக் கட்டித் தமது மேலாண்மையை நிலைநிறுத்திய நிகழ்வுகளும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வருமானத்தை வெகுவாகப் பாதித்தன.

பதினேழாம் நூற்றாண்டு போர்த்துக்கீச ஆவணத்திற் குறிப்பிட்டதன்படி யாழ்ப்பாண இராச்சிய மன்னர் 118000 பதகாஸ் (Patacas) வருட வருமானப் பணமாகவும் 851 கன்டில் (Candils) நெல் உட்பட தானியப் பொருட்களையும் வாழைப் பழம், எண்ணெய், வெற்றிலை, நெய், பால், தேன் போன்ற பொருட்களையும் வருடந்தோறும் அரச வருமானமாகப் பெற்றனர்.

மேலும் பிடிக்கப்படுகின்ற யானை ஒவ்வொன்றுக்கும் அதிக வரியை அறவிட்டார்கள். அத்தோடு மன்னார்க் கடலில் முத்துக் குளிப்பின் மூலம் பெறப்பட்ட முத்து, சங்கு போன்ற விலை மதிப்பற்ற பொருட்களைத் தென்னாசியா, தென்கிழக்காசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிகளவு வருமானத்தையும் யாழ்ப்பாண மன்னர்கள் பெற்றதை இபன்பதூதாவின் நேரடி அனுபவத்திலிருந்தும் அவன் வெளியிட்ட விபரங்களிலிருந்தும் அறியப்பட்டமை முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1591 இல் சங்கிலி மன்னன் பல கப்பல்களில் தனது பெருந் தொகைப் பணம், தங்கம், வைரம், முத்து என்பவற்றையும் ஏனைய திரவியங்களையும் ஏற்றிக்கொண்டு தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றபோது போர்த்துக்கீசக் கடற்படையினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு அவனுடைய சகல பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அப்பொருட்களில் தங்க நகைகளிலிருந்து மட்டும் கிடைத்த வருமானம் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டமையின் பொருட்டு படையினருக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டமை பற்றி போர்த்துக்கீச ஆவணத்திலிருந்து தெரிய வருவதாவது,

படையெடுப்பில் சென்ற அனைவருக்குமே யாழ்ப்பாணம் ஏதாவதொன்றை அளிக்கவே செய்தது. வெற்றியின் ஆனந்தத்தை விட அனுபவிக்கக்கூடிய வேறு பல பொருட்கள் அதிகமாக பரிசாகக் கிடைத்தன.

ஒலிவேறாவுக்கு அவனது சேவையைப் பாராட்டுமுகமாக 1000 பாறோஸ் கோவாவிலுள்ள வரிக் கவுன்சிலின் தீர் மானத்தின்படி வழங்கப்பட்டது. சூறையாடப்பட்ட பணத்தில் ஒரு பங்கு அவனுக்கு உரிமை அளிக்கப்பட்டது.

சங்கிலி தனது ஆட்களுடன் தப்பி ஓடுவதற்காக வாடகைக்கு அமர்த்திய கப்பலைக் கைப்பற்றிய போர் வீரர்களுக்கு மேலதிகபரிசாக 800 சேராபின்கள் வழங்கப்படவேண்டும் எனவும் கவுன்சில் தீர்மானித்தது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட படையெடுப்பில் பங்குபற்றிய சாதாரண போர் வீரர்களுக்கும் விசேட பங்கு வெகுமதி பெற்றார்கள். இந்தச் செலவுகள் யாவும் சங்கிலியிடமிருந்து கைப்பற்றிய சொந்தப் பொருட்களிலிருந்தும் நகைகளிலிருந்தும் கொடுக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கீசர் தலையீடும் அவர்கள் மேலாண்மை 1560 களில் ஏற்பட்டபோது யாழ்ப்பாண மன்னன் அதிகளவு பணத்தை அல்லது பத்து கொம்பன் யானைகளை போர்த்துக்கீசருக்குப் கப்பமாக வருடந்தோறும் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான்.

அத்தோடு போர்த்துக்கீசரின் கப்பல்கள் கரையோரத்துறைகளில் தங்கு தடையின்றிப் போக்குவரத்து புரிந்தமையும் யாழ்ப்பாண மன்னன் தென்னாசிய, தென்கிழக்காசிய வர்த்தகத்திலிருந்தும் ஈட்டிய பெருந்தொகையான வருமானத்திற்கு பெருந்தடையாக அமைந்தது.

1561 இல் முத்துக்குளிக்கும் துறைமுகமாகிய மன்னார் பிரதேசம் போர்த்துக்கீசர் கைகளுக்கு மாறியமையும் அவர்கள் மன்னர் முத்துக்குளிப்பின் ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொண்டமையும் யாழ்ப்பாண இராச்சிய மன்னனின் வருமானத்தைப் பாதித்தன.

1591 இல் யாழ்ப்பாணப் பிரதேசம் போர்த்துக்கீசரின் மேலாண்மையை ஏற்றதன் விளைவாக அதிகளவு பணத்தை அல்லது யானைகளை யாழ்ப்பாண அரசன் போர்த்துக்கீசருக்கு வருடாவருடம் கப்பமாக வழங்க வேண்டியிருந்தது.


(தொடரும்)

# இனப்படுகொலை கூட்டாளிகள் ஒன்றுசேர்ந்துள்ளதை இந்திய அரசு வேடிக்கை பார்க்கக்கூடாது

## அன்புமணி ராமதாஸ் காட்டம்

(சென்னை)

**இலங்கையில் இனப்படுகொலை கூட்டாளிகள் ஒன்றுசேர்ந்திருப்பதை இந்திய அரசு வேடிக்கை பார்க்கக்கூடாது என, பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**



நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கைப் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டு, புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

இலங்கை ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்த போது, அவருக்கு இந்தியா வலிந்து சென்று உதவினாலும் அவர் சீனாவுக்கு மட்டுமே விசுவாசம் காட்டினார்.

அண்மையில் டில்லி வந்து, இந்தியப் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்து விட்டுச் சென்ற மகிந்த ராஜபக்ஷ, சீனாவின் ஆதரவுடன் பிரதமராக பதவி ஏற்றிருக்கிறார்.

இது இலங்கையின் உள்விவகாரம் தான் என்றாலும், இந்த மாற்றம் இந்தியாவின் பாதுகாப்புச் சூழலையும், இலங்கையில் வாழும் தமிழர்கள் நலனையும் மிகக் கடுமையாக பாதிக்கும்.

ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் ஆதரவாளர் என்று கூறப்படும் நிலையில், அவர் பதவி நீக்கப்படுவதை இந்தியா முன்கூட்டியே அறிந்து, இராஜதந்திர நடவடிக்கைகளின் மூலம் தடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை செய்யாமல் மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை இந்தியா தனக்குத்தானே தேடிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி வகித்த காலத்தில், சீனாவிடம் வாங்கியக் கடனுக்காக இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை ஒப்படைத்தார்.

அந்தத் துறைமுகத்தை இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டால், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

இந்த அச்சுறுத்தலை முறியடிக்கும் நோக்குடன் மாத்தளை விமான நிலையத்தை கையகப்படுத்த இந்தியா முயன்றது. அதற்கு இலங்கை அரசும் ஒப்புக்கொண்டது. ஆனால், பிரதமராகியுள்ள மகிந்த ராஜபக்ஷ, இந்தியாவிடம் மாத்தளை விமான நிலையம் ஒப்படைக்கப்படுவதை தடுப்பார். அதுமட்டுமன்றி அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் இராணுவப் பயன்பாட்டை அனுமதிப்பார். இது இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆபத்தாக முடியும்.

அதேபோல், ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வீழ்த்தப்பட்டதற்கு பின்னரே ஈழப்பகுதிகளில் தமிழ் மக்கள் ஓரளவு நிம்மதிக் காற்றை சுவாசிக்க முடிகிறது. தமிழர்கள் வாழும் பகுதிகளில் மீண்டும் அதிக அளவில் இராணுவத்தை நிறுத்துவதன் மூலம் தமிழர்களை மகிந்த ராஜபக்ஷ அச்சுறுத்துவார்.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ இருந்ததால் தான், 2009 முதல் 2015 வரை இலங்கைப் போர்க் குற்ற விசாரணையில் முன்னேற்றம் எட்டப்படவில்லை.

ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிறகும் கூட போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிமன்ற விசாரணையோ, இலங்கை மற்றும் சர்வதேச நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்ற விசாரணையோ நடக்காமல் தடுத்துவந்தார்.

அப்பாவித் தமிழர்கள், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதில் ராஜபக்ஷ மட்டும் குற்றவாளியல்ல. இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவருக்குத் துணை நின்றவர்தான். இனப்படுகொலையாளிகள் இருவரும் ஜனாதிபதி மற்றும் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள நிலையில், போர்க்குற்ற விசாரணையை முற்றிலுமாக முடக்கத் துடிப்பார்கள்.

அதைத் தடுத்து ஈழத் தமிழர்களுக்கு நீதிபெற்றுத் தரவேண்டிய கடமையும், பொறுப்பும் இந்தியாவுக்கு இருக்கிறது. எனவே, இலங்கை பிரதமராக ராஜபக்ஷவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் அங்கீகாரம் அளிப்பதை இந்தியா தடுக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, போர்க் குற்றங்கள் குறித்து நீதி விசாரணையை இலங்கை நடத்த வேண்டும் என வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது.

ஆனால், அதற்குள் போர்க் குற்ற விசாரணை முடிவடையாது என்பதால் போர்க்குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இந்தியா கொண்டுவர வேண்டும்" என அன்புமணி ராமதாஸ் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1542

Search for people, places and things

### விக்னேஸ்வரா

தமிழின் சிறப்பான 3 விதமான ல,ழ,ள எழுத்துக்கள் பயன்படும் ஒரே சொல்



தொழிலாளி

### கார்த்திக்சிவா

இதையெல்லாம் கடந்து வந்தாச்சு.... இனிநாமே போனாலும் இப்படியோ இடமும்



அதே குழந்தைத் தனமும் இருப்பது கஷ்டம்

### யோகித்

ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவரிடம் இருக்கும் நிம்மதி



நாயை வோக்கிங் கூட்டிச் செல்பவர்களுக்கு இருப்பதில்லை

### கனிசெல்வன்

என்னை ஒன்னும் செஞ்சுடாதீங்க டாக்டர்... அந்த நர்ஸ் உங்க ஆளுன்னு தெரியாம கண் அடிச்சிட்டேன்



### தமன்

சரியாதான் பேரு வச்சிருக்கானுங்க வலைத்தளம் என்று



சிக்கினா வெளியே வரவே முடியல

### டருண்

எந்தவொரு மினரல் வோட்டரும் நம்ம ஊரு மண் பானை தண்ணியோட சுவைக்கு ஈடாகிவிடாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கதிரைகள் மாறியுள்ளனவே தவிர விடயங்களில் மாற்றம் ஏற்படவில்லை

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பிரதமராக மகிந்த ராஜப க்ஷ பதவியேற்ற பின்னர் கூறப் போகும் கருத்து தொடர்பாக பாரிய எதிர்பார்ப்பு காணப்பட்டது. அந்தவகையில், நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளடங்கலாக நடைபெற்ற கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ முக்கிய கருத்தொன்றை முன்வைத்துள்ளார்.

கதிரைகள் மாறியுள்ளனவே தவிர விடயங்களில் மாற்றம் ஏற்படவில்லையென அவர் கூறியுள்ளார். அதாவது பதவிநிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளனவே தவிர, அவற்றின் செயற்பாடுகளில் எவ்வித மாற்றமும் இல்லையென்பதே அவரது கருத்தாக அமைந்துள்ளது.

மகிந்த ஜனாதிபதியாக பதவி வகித்தபோது மைத்திரி அமைச்சுப் பொறுப்பை வகித்திருந்தார். இப்போது ஜனாதிபதியாக மைத்திரி செயற்படும் நிலையில், மகிந்த பிரதமராக உள்ளார். இந்த பதவிநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளனவே தவிர, செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படவில்லையென மகிந்த குறிப்பிடுவதானது, சகல விடயதானங்களும் தமது கட்டுப்பாட்டில் இருக்குமென்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

இதேவேளை தன்னுடைய அரசியல் பாதையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பாதையும் வெவ்வேறு திசையில் பயணிக்க ஆரம்பித்தமையே பிளவிற்கு காரணம் என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார்.

அத்தோடு, தன்னை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்படுவதாக வெளியான செய்திகளின் பின்னர் பிரதமர் அதுகுறித்து அவ்வளவாக கரிசனை கொள்ளாமையும் காரணமென ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாக வெளியான செய்திகளின் பின்னர் நல்லாட்சி ஆட்டம் காண ஆரம்பித்தது. இரு பிரதான கட்சிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் வலுப்பெற்று, அதன் வெளிப்பாடாக அரசாங்கத்திலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறியது. வெளியேறி சில நிமிடங்களில் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றார்.

நாட்டின் அரசியலில் ஏற்பட்ட இத்திடீர் மாற்றம் தொடர்பாக பல கருத்துக்கள் வெளிப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி அதற்கான காரணத்தை வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு, இனிவரும் கால அரசியல் நிலைப்பாடு தொடர்பாக பிரதமர் மகிந்த சூட்சுமமாக தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொலைச் சதியில் கைதான

## நாலகவுடன் உரையாடிய பின்னர் அதிரடி முடிவெடுத்த மைத்திரி

(கொழும்பு)

கடந்த 26ஆம் திகதி மாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புதிய பிரதமராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமை முழு நாட்டு மக்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி செயலகத்தில் இருந்த கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட மகிந்த ராஜபக்ஷ பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்ய போகிறார் என்ற தகவல் தெரிந்திருக்கவில்லை.

ஜனாதிபதி, தன்னை ஆட்சிக்கு கொண்டுவர பாடுபட்டு ஒத்துழைப்புகளை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியை கைவிட்டு, மகிந்த ராஜபக்ஷவிடம் நெருக்கமானது ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி கிடைத்த மக்களை ஆணை காட்டிக்கொடுத்துள்ளதாக அந்த கட்சி குற்றம் சுமத்தி வருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சுமத்தப்படும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நாலக டி சில்வா கடந்த 25 ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு விசாரணைகளில் ஆஜராக வந்திருந்த போது கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நாலக டி சில்வா, எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நாலக டி சில்வாவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தொலைபேசியில் உரையாடியுள்ளனர். சுமார் 30 நிமிடங்கள் இருவரும் உரையாடியதாக கூறப்படுகிறது.

இந்த தொலைபேசி உரையாடலின் பின்னர் ஜனாதிபதி கடும் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளார். நாலக டி சில்வா, மிகவும் முக்கியமான அல்லது இரகசியமான ஏதோ ஒரு தகவலை ஜனாதிபதியிடம் கூறியிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

அதிகார மாற்றத்திற்கு இந்த தொலைபேசி உரையாடலே மிக முக்கியமான காரணமாக இருப்பதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியை கொலை செய்யும் சதித்திட்டத்தில் அரசாங்க தரப்பில் சம்பந்தம் இருப்பதாக ஜனாதிபதி அவ்வப்போது மறைமுகமாக குறிப்பிட்டு வந்தார்.

இதனை காரணமாக கொண்டே ஜனாதிபதி, ரணில் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை கைவிட்டு தனது பழைய தலைவரிடம் சென்றதாக கூறப்படுகிறது.

தன்னை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டும் தரப்பை நீக்கி விட்டு தனக்கு பாதுகாப்பாக இருக்கும் என எண்ணும் தரப்பை தன்னுடன் இணைத்துக்கொள்வது ஜனாதிபதியின் திட்டமாக இருந்துள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், தான் கூறியதை ஜனாதிபதி மறந்து விட்டதாகவே தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றுப் போயிருந்தால், பூமிக்கு கீழ் ஆறடியில் புதைக்கப்பட்டிருப்பேன் எனவும் தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரை தான் தலைமறைவாக இருந்ததாகவும் உயிர் வாழ்வேன் என்ற நம்பிக்கை தனக்கு இருக்கவில்லை எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

அன்று அப்படி கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னை ஆறடி குழியில் புதைக்க தருணம் பார்த்து காத்திருந்த நபரை தன்னுடன் இணைத்துக் கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# மகிந்தவின் மீள் வருகை ஆச்சரியமானதல்ல!

## புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சி

(கொழும்பு)

மகிந்தவின் மீள் வருகை ஆச்சரியமானதல்ல என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் புதிய பிரதமராக பதவிப்பிரமாணம் பெற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீள் வருகை தொடர்பாக நேற்று புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் மீள் வருகை ஆச்சரியமானதல்ல. இதன் சாத்தியத்தை நாம் தொடர்ந்து சுட்டிக் காட்டி வந்துள்ளோம். எமது மக்களுக்கு இந்த மாற்றம் மூலம் எதுவும் ஆக போவதில்லை என்கிற தெளிவு கடந்த 10 வருடங்களில் எமக்கு அனுபவம் மூலம் ஏற்பட்டது.

ஆகவே, நாம் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கிறோம். மக்கள் மத்தியில் நாம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பாக வருவதற்கான ஒரு முயற்சினையே முன்னெடுத்து வருகிறோம்.

இன்று மக்களை ஏமாற்றி சுயநல அரசியல் செய்யும் தமிழ் தலைமைகளை வெளியேற்றும் தார்மீக கடமையினை முன்னெடுக்கிறோம் என அக்கட்சியின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணிலுடன் “பொருந்தாத திருமணம்” ஓராண்டிலேயே தெரிந்து விட்டது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு







(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடனான மகிழ்ச்சியற்ற பொருந்தாத திருமணம் முடிவுக்கு வந்து விட்டதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று, முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி விட்டு, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமைக்கான காரணங்களை, இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

“கூட்டு அரசாங்கத்தை அமைத்து ஒரு ஆண்டுக்குள்ளாகவே, ரணில் விக்கிரமசிங்கவுடன், பொருந்தாத திருமணத்துக்குள் நுழைந்து விட்டதாக நன்றாக உணர்ந்து கொண்டேன்.

அவர்களுடன் எமக்கு கலாசார வேறுபாடுகள், மாத்திரமன்றி, பிணை முறி விவகாரம், பொருளாதாரத்தைக் கொண்டு வருவதில் தோல்வியுற்றமை உள்ளிட்ட வேறு காரணங்களும் கூட, இந்த பொருந்தா திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, புதிய அரசாங்கத்தை அமைத்ததற்குக் காரணமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீரவினால் முன்வைக்கப்பட்டது.

இதனை நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க வழிமொழிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக அதற்கு இணக்கம் தெரிவித்தனர். (இ)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 160 | 160 | 180 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 140 | 160 | 200 | 200 |
| தக்காளி | 160 | 100 | 160 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 150 | 100 | 120 | 160 | 140 |
| கரட் | 140 | 120 | 200 | 280 | 200 |
| பூசணி | 80 | 40 | 50 | 80 | 50 |
| புடோல் | 160 | 100 | 120 | 160 | 150 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 140 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 95 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 240 | 150 | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 150 | 80 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 180 | 200 | 240 | 300 |
| லீக்ஸ் | 100 | 70 | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 200 | 120 | 240 | 200 | 220 |
| முருங்கைக்காய் | 240 | 80 | 120 | 120 | 200 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 420 | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 50 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 200 | — | — | 200 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 90 | 240 | 200 | — |
| முள்ளங்கி | 80 | 30 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 20 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 25 | 50 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 80 | — |




## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# காக்கையின் அருமை



ஒரு மரத்தில் ஆண் காகம் ஒன்றும் பெண் காகம் ஒன்றும் தன் குஞ்சுகளுடன் கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அங்கிருந்து சற்று தொலைவில் உள்ள நகரத்துக்கு வந்து, கிடைக்கும் உணவை உண்டு மாலை ஆனதும் தனது கூட்டுக்குச் சென்று விடும் கூடவே குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு போய் திரும்பி கூட்டில் விடும்.

தினம் தினம் மனிதர்கள் போடும் மிச்சம் மீதி உணவுகளைச் சாப்பிட்டு வாழ்ந்து வருவதை அந்த மரத்திலே வசிக்கும் மற்ற பறவைகள் கேலி செய்தன. எங்களைப் போல் காட்டுக்குள் சென்று வாழ முடியாத உன்னால் எங்களுக்குத் தான் கேவலம். பேசாமல் நீ மனிதர்களுடனே போய் வாழ வேண்டியதுதானே என்று கேட்டன.

காகம் அந்தப் பறவைகளிடம் நாங்கள் மக்களிடம் சென்று சாப்பிட்டு பிழைப்பதால் நகரத்தில் சுத்தம் ஏற்படுகிறது. ஒரு விதத்தில் நாங்கள் மனிதர்கள் வீசும் கழிவுகளை உண்பதால் நகரம் சுத்தமாக ஆகிறது ஆகவே நாங்கள் உழைத்துத்தான் சாப்பிடுகிறோம். அதுவும் அவர்களாக பார்த்துக் கொடுப்பதை நாங்கள் பகிர்ந்துதான் உண்கிறோம் என்று பதில் சொல்லியது.

இருந்தாலும் மயில், புறா, குருவி போன்றவைகள் காக்கைகளைக் கேலியும் கிண்டலும் செய்து கொண்டுதான் இருந்தன. நீங்கள் எல்லாம் கறுப்பாய் இருக்கிறீர்கள் அதனால்தான் மனிதர்கள் உங்களை அடிமை போல நடத்துகிறார்கள் என்று காக்கைகளின் நிறத்தையும் கேலி செய்து பேசின. மேலும் நீங்கள் மாமிச பட்சிணிகள், எங்களுடன் நீங்கள் வசிப்பது எங்களுக்கு வருத்தமாக உள்ளது என்றெல்லாம் பேசின.

இதைக் கேட்ட காக்கைக் குஞ்சுகள் மனம் வேதனைப் பட்டு தங்கள் பெற்றோரிடம் நாம் இங்கிருந்து போய் விடலாம் என்று சொல்லின. ஆண் காகம் உடனே தன் குஞ்சுகளைப் பார்த்து குழந்தைகளே மற்றவர்கள் பேசுவதற்கும், ஏசுவதற்கும் பயப்பட்டு நாம் கூட்டைவிட்டு சென்றோம் என்றால் நம்மால் எங்கும் வசிக்க முடியாது. எங்கு சென்றாலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கும். நாம் அதனை அனுசரித்துப் பழகிக்கொண்டோம் என்றால் நம்மால் நன்றாக வாழமுடியும். ஆகவே மற்றவர்கள் சொல்வதைப்பற்றி கவலைப்படாமல் வாழ கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய அருமை மற்றவர்களுக்குப் புரியும் போது எல்லாம் சரியாகிவிடும் என்று அறிவுரை கூறியது.

அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் கொஞ்ச நாட்களாக கவலையில் இருந்தன. தங்களுக்குள் வருத்தப்பட்டுப் பேசிக்கொண்டன. இதைக் கவனித்த ஆண் காகமும் பெண் காகமும் மயில்களிடம் சென்று ஏன் கவலையாயிருக்கிறீர்கள் என்று கேட்டன. மயில்கள் சோகமுடன் நாங்கள் மனிதர்களின் விவசாய நிலத்தில் பயிராகும் கதிர்களை மேய்ந்து விடுவதால் மனிதர்கள் எங்கள் மேல் கோபம் கொண்டு எங்களுக்கு மருந்து வைத்து அழிக்க முற்படுகிறார்கள். அது மட்டுமல்ல இந்த மரத்தில் வசிக்கும் எங்கள் அனைவரையும் வலை போட்டுப் பிடித்துச் செல்ல இன்றோ நாளையோ வருவதாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று வருத்தத்துடன் சொன்னது.

காகங்கள் கவலைப்படாதீர்கள் இந்த மரத்தில் வசிக்கும் உங்களைக் காக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றன. இவர்களால் எப்படி எங்களை காப்பாற்ற முடியும் என்று நம்பிக்கை இல்லாமல் மயில்கள் காகங்களைப் பார்த்தன.

இவைகள் பேசிக்கொண்டிருந்த மறு நாள் நான்கைந்து மனிதர்கள் மரத்தின் அருகில் வந்து நின்று மயில்களை எப்படிப் பிடிக்கலாம் எனப் பேசிக்கொண்டிருந்த பொழுது திடீரென்று அந்த மரத்திலிருந்து நூற்றுக்கணக்கான காகங்கள் கிளம்பி அந்த மனிதர்களை நோக்கி பறந்து வந்தன. வந்தவைகள் மனிதனின் தலை மேல் கொத்துவதற்குப் பாய்ந்து வர அங்கிருந்த மனிதர்கள் ஐயோ, அம்மா, என்று கூக்குரலிட்டுப் பயந்து தலைதெறிக்க ஓட ஆரம்பித்து விட்டனர்.

ஒரு சில நாட்கள் கழித்து அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் காகங்களிடம் வந்து உங்களுக்கு மிகவும் நன்றி. நீங்கள் இந்த மரத்தில் வசிப்பதால் எங்களுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. மனிதர்கள் இந்த மரத்திற்கு அருகில் வந்தாலே நீங்கள் கொத்திவிடுவீர்கள் எனப் பயப்படுகிறார்கள். உங்களுக்கு மட்டும் எப்படி இத்தனை நண்பர்கள் என்று ஆச்சர்யத்துடன் கேட்டன. காகங்கள் சிரித்தவாறு நாங்கள் பிழைப்புக்காக மனிதர்களை நாடினாலும் எங்களுக்கிடையில் எப்பொழுதும் ஒற்றுமையாய் இருப்போம். ஒருவருக்கு ஆபத்து என்றாலும் அனைவரும் உதவிக்கு வந்து விடுவோம் என்று கூறியது. மயில்கள் மிக்க நன்றி கூறி விடை பெற்றன.

ஒரு நாள் குருவிகள் கீச், கீச், என்று கத்தியவாறு அலைபாய்ந்து கொண்டிருந்தன. என்னவென்று எட்டிப்பார்த்த காகம் அங்கு ஒரு பாம்பு குருவிக்கூட்டை நோக்கி போவதைப் பார்த்து தன் குஞ்சுகளை காப்பாற்றுவதற்குத்தான் அவ்வாறு கத்துகிறது என்பதைப் புரிந்து கொண்டு ஆண் காகமும் பெண் காகமும் பாய்ந்து சென்று அந்தப் பாம்பைக் கொத்த ஆரம்பிக்க இவைகள் இருவரின் கொத்துதல்களைச் சமாளிக்க முடியாத பாம்பு விட்டால் போதும் என்று கீழே சர சர வென இறங்கி சென்றுவிட்டது. குருவிக்குஞ்சுகள் காக்கைகளிடம் வந்து மிக்க நன்றி சொல்லி அவர்களை கேலியும் கிண்டலும் செய்ததற்கு வருத்தம் தெரிவித்தன.

ஒரு முறை ஒரு வீட்டில் பெரிய விசேஷம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்த வீட்டில் இருந்தவர்கள் ஒரு இலையில் நிறைய சாப்பாட்டை எடுத்து வந்து வீட்டிற்கு மேலே வைத்தனர். அப்பொழுது மேலே பறந்து கொண்டிருந்த பறவைகள் சாப்பாட்டின் வாசத்திற்குக் கவரப்பட்டு அதை சாப்பிடுவதற்குக் கீழே இறங்கின. உடனே அந்த வீட்டில் இருந்தோர் அந்த பறவைகளை விரட்டினர். சாப்பாட்டை மேலே கொண்டு வந்து வைத்துவிட்டு சாப்பிட விடாமல் விரட்டினால் என்ன அர்த்தம்? என்று பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொண்டன. அப்பொழுது அந்த இரு காக்கைகள் பறந்து வந்து அந்த சாப்பாட்டைக் கொத்த ஆரம்பித்தன. உடனே அந்த மனிதர்கள் கையெடுத்துக் கும்பிட்டனர். மற்ற பறவைகளுக்கு ஒரே ஆச்சர்யம்? அந்த காகங்களிடம் அதெப்படி எங்களை சாப்பிடவிடாமல் விரட்டிய மனிதர்கள் நீங்கள் சாப்பிடும் போது மட்டும் கையெடுத்துக் கும்பிடுகிறார்களே? என்று கேட்டன.

அந்தக் காகங்கள் நாங்கள் சாப்பிடுவதை, தங்களுடைய முன்னோர்களே அந்த சாப்பாட்டை சாப்பிடுவதாக மக்கள் நினைக்கிறார்கள், அதனால்தான் கை கூப்பி நன்றி தெரிவிக்கிறார்கள் என்றன. இதைக் கேட்ட மற்ற பறவைகள் காகங்களின் அருமையை உணர்ந்து கொண்டன. தாங்கள் கேலி செய்து பேசியதற்கு மன்னிப்புக் கூறின.

(பிறரின் தோற்றம் முக்கியமல்ல அவர்களின் நற்செயல்கள்தான் கவனிக்கப் படவேண்டும்)

## இயற்கையை பாதுகாப்போம்

காப்போம் காப்போம்
சூழலைக் காப்போம்
தவிர்ப்போம் தவிர்ப்போம்
பிளாஸ்ரிக்கை தவிர்ப்போம்
நடுவோம் நடுவோம்
மரங்களை நடுவோம்
பேணுவோம் பேணுவோம்
சுத்தம் பேணுவோம்
பெருக்குவோம் பெருக்குவோம்
குப்பைகளைப் பெருக்குவோம்
பிரிப்போம் பிரிப்போம்
குப்பைகளைத் தரம் பிரிப்போம்
நேசிப்போம் நேசிப்போம்
இயற்கையை நேசிப்போம்
வாழ்வோம் வாழ்வோம்
இயற்கையோடு வாழ்வோம்
மரம் வளர்த்து இயற்கையை
நேசித்து இயற்கையோடு வாழ்வோம்.

சி.லக்ஷன்
யா/நல்லூர் சென்பெனடிக்ற்
றோ.க.வி.



தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்

மக்கள் சேவையே மகேசன் சேவை.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு சாதகமாக தீர்மானம் எடுங்கள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்ற கையோடு பாராளு மன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்காக சகல தரப்பினரிடமும் ஆதரவு கேட்கும் படலம் இப்போது வேகமாக நடந்த வண்ணமுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப் பாடு என்ன என்பது முக்கியமானதாகும்.

இதுகாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவை ஆதரித்து வந்த கூட்டமைப்பு இப்போது யாரை ஆதரிப்பது என்பது சங்கடமான விடயமே.

அரசியல் களத்தில் கடந்த காலங்களிலும் யாரை ஆதரிப்பது என்ற சூழ்நிலை ஏற்பட்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவு தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமைய வில்லை.

இதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தமிழ் மக்களின் நலன் என்பது பற்றிச் சிந்திக்காமல், கட்சியினதும் தங்களின் தலைமை யினதும் நலன் பற்றிய சிந்தனையே மேலெழுந் திருந்தது.

இதன்காரணமாக அரசியல் மாற்றத்தைச் சாதகமாக்கிக் கொள்ளுகின்ற பலன் தமிழ் மக் களுக்கு இருந்திருக்கவில்லை.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தபோது கூட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தான் வழங்குகின்ற ஆதரவுக்காக,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை யையோ அல்லது இராணுவ ஆக்கிரமிப்புக் குட்பட்ட நிலத்தை விடுவிப்பதையோ பேரம் பேசவில்லை.

இதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை க்கு எதிராக வாக்களித்தது என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்றாயிற்று.

இப்போது இலங்கையின் அரசியலில் மிகப் பெரும் அதிரடி மாற்றம் ஏற்பட்டுள்ளது. யாரும் எதிர்பாராத வகையில் ஜனாதிபதி மைத்திரிபால மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கியுள்ளார்.

இந்நிலையில் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தனது பதவி நீக்கம் தொடர்பில் குய்யோ முறையோ என சர்வதேச நாடுகளின் தூதுவர்களிடம் முறைப் பாடு செய்து வருகிறார்.

அவரின் முறைப்பாடு வெற்றியளிக்குமா இல்லையா என்பதற்கு அப்பால், பிரதமராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ தனக்கு இருக் கக்கூடிய பெரும்பான்மை பலத்தைப் பாராளு மன்றத்தில் நிரூபித்தாக வேண்டும்.

இதற்காக அவர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆதரவைக் கோரியுள்ளார். அதே நேரம் ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டமைப் பின் ஆதரவைக் கேட்டுள்ளார்.

இங்குதான் கூட்டமைப்பு நிதானமாக தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகை யில் நிபந்தனை விதிப்புகளின் அடிப்படையில் தனது ஆதரவை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த முடிவில் தவறு ஏற்பாட்டால் அதன் பாதிப்பு தமிழ் இனத்துக்கேயன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அல்ல என்பது கவ னிக்கப்பட வேண்டும்.

# ஜனாதிபதி நிதியம் மூலம் வழங்கப்படும் சேவைகள் இணையத்தளம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தினூ டாக பொதுமக்களுக்கு வழங் கும் சேவைகளை வினைத் திறனாக மேற்கொள்வதற் கும் அச்சேவைகளை இலகு படுத்தும் நோக்குடனும் வடி வமைக்கப்பட்டுள்ள புதிய இணையத்தளம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி னால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

ஜனாதிபதி அலுவலகத் தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

http://www.presidentsfund.gov.lk என்ற இணை யத்தளத்திற்கு பிரவேசித்து ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான விபரங்களை யும் விண்ணப்பப் படிவங் களையும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், இணை யத்தளத்தின் ஊடாக விண் ணப்பப்படிவங்களை நிரப்பு வதற்கும் வசதிகள் செய்யப் பட்டுள்ளன. அதனைத் தொடர ந்து இடம்பெறும் நடவடிக கைகள் குறித்தும் தொடர்ச்சி யாக இந்த இணையத்தளத் தின் மூலம் மக்களுக்கு தக வல்களை பெற்றுக்கொள் வதற்கான வசதிகள் செய் யப்பட்டுள்ளன.

1978ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஜனாதிபதி நிதிய சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள ஜனாதி பதி நிதியத்தின் நோக்கங் கள் பல உள்ளன. அவற்றில் உயிருக்கு ஆபத்தான நோய் களுக்கான மருத்துவ உதவி வழங்குவது அடிப்படை நோக்கமாகும்.

இந்த நிதியத்தின் நிர் வாக சபை உறுப்பினர்க ளாக ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிப தியினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். நிர்வாக சபை யின் தலைவர் ஜனாதிபதி ஆவார். தற்போது ஜனாதி பதி நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொறுப் பாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் செயலா ளர் ஒருவர் நியமிக்கப்பட்டு ள்ளார்.

இந்த நிதியத்தின் கணக் குகள் மத்திய வங்கியினால் மட்டுமே பேணப்பட்டு வருகின றது. ஒவ்வொரு வருடமும் கணக்காய்வாளர் நாயகத் தினால் கணக்காய்வு செய்ய ப்பட்டு அறிக்கை பாராளு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப் படுகின்றது.

கல்வி புலமைப்பரிசில் களை வழங்குதல், சமய வளர்ச்சிக்கான நிதி உதவி களை வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலன்பேணல் நிக ழ்ச்சித் திட்டங்களுக்கான உதவிகளை வழங்குதலும் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படு கின்றது. (இ-7)

## விரைவில் தேர்தல்

### தினேஷ் எம்.பி

(கொழும்பு)

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், முடிந்தளவு விரைவாக நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதே தமது இலக்கு என்று நாடாளுமன்ற உறுப் பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரி வித்தபோது அவர் இவ் வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாடாளுமன்றில் தெளி வான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான உறுப் பினர்களின் எண்ணிக்கை எம்மிடம் உண்டு. அதனை நிரூபிக்க தயாராக உள் ளோம்.

ஜனாதிபதி குறிப்பிட்ட மைக்கமைய எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நாடா ளுமன்றம் கூடும். பெரும் பான்மை விடயத்தில் மாற் றுக்கருத்திற்கு இடமில்லை. முடிந்தால் ரணில் தனது பெரும்பான்மையை நிரூ பித்துக் காட்டட்டும்.

அடுத்த ஜனவரி, பெப்ர வரி மற்றும் மார்ச் ஆகிய மூன்று மாத காலத்திற்கான கணக்கு வாக்கெடுப்பொன்றை முன் வைக்கவுள்ளோம். நாட்டின் இயல்புநிலை மற் றும் பொருளாதார நெருக் கடியை தீர்க்க குறித்த கண க்கு வாக்கெடுப்பு உதவும்.

மேலும், தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஜன நாயக உரிமைகளை பாது காத்து ஒரு புதிய யுகத்தில் காலடி எடுத்து வைக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்" என்றார். (மு)

## இனந்தெரியாத நபர்களின் தாக்குதலில் வர்த்தகர் காயம்

முள்ளி ஊடாக பயணி த்த வர்த்தகர் ஒருவர் இனம் தெரியாத நபர்களால் தாக் கப்பட்ட நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு 7.30 மணி யளவில் நெல்லியடியில் உள்ள தனது வர்த்தக நிலை யத்தினை பூட்டிவிட்டு தென் மராட்சி நோக்கி பயணித்த வர்த்தகரே தாக்கப்பட்டவரா வார்.

இரவு வர்த்தக நிலையத் தினை பூட்டிவிட்டு புலோலி-கொடிகாமம் வீதியூடாக சென்று கொண்டிருந்தபோது முள்ளி பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த வர்கள் வர்த்தகரின் மோட் டார் சைக்கிளை மறித்து தாக்குதல் மேற்கொண்டதில் வர்த்தகர் தப்பிச் சென்று அருகில் இருந்த புதரில் மறைந்து இருந்து பொலிஸா ருக்கு தகவல் கொடுத்ததாக வும் பொலிஸார் அங்கு விரைந்தபோது இனந் தெரி யாத நபர்கள் தப்பிச் சென் றுள்ளனர்.

தாக்கப்பட்ட வரணி பகுதி யைச் சேர்ந்த வர்த்தகர் பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர். (மு-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை செவ்வாய் க்கிழமை காலை 8 மணியி லிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதே சத்தில அச்சங்குளம், எரு விட டான், அறுகுகுன்று, அள வக்கை, மாவிலங்கேணி, செம்மண்தீவு **Ware House**, வாழ்க்கை பட்டான் கண் டல், பல்லங்கோட்டை, பண் டாரக்குளம், நானாட்டான் . முருங்கனிலிருந்து சிலா பத்துறை வரை, அரிப்பு, சிலாபத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற் படை முகாம் ஆகிய பிரதே சங்களிலும மின் தடைப்ப டும். (இ-9)

## அரச ஊடகங்களுக்கு புதிய தலைவர்கள் நியமிப்பு

அரச ஊடகங்களுக்கு புதிய தலைவர்கள் நேற்று முதல் (ஞாயிற்றுக்கிழமை) அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி இலங்கை ரூப வாஹினிக் கூட்டுத்தாபனத் தின் பதில் தலைவராக சரத் கோன்கசே நியமிக்கப்பட் டுள்ளார்.

அத்துடன் இலங்கை சுயாதீன தொலைக்காட்சி மற்றும் இலங்கை ஒலி பரப புக் கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவராக பேராசிரி யர் சோமரத்ன திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பதில் தலை வராக வசந்த பிரியா ராம நாயக்க நியமிக்கப்பட்டுள் ளார். (மு)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பற்றறிவு, கற்றறிவு



தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று சொற்களைக் கேட்டிருப்பீர்கள். இவற்றுள் தூலமாகியது உடல், சூக்குமமாகியது உயிர், காரணம் என்பது பிரம்மம் அல்லது மெய்ப்பொருள். இந்த உடலுக்கு மையப்புள்ளி, சுற்று வட்டம் இரண்டும் உண்டு. அதாவது உடலுக்கு எல்லை உண்டு. உயிருக்கும் மையப்புள்ளி உண்டு ஆனால் அதனுடைய சுற்றுவட்டம் ஒரு எல்லைக்குள் அடங்காது. மெய்ப் பொருளுக்கோ மையப்பள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை. அந்த உயிருக்கு மனமானது விரியும் போது அது பிரம்மம் வரையில் போவதனால் சுற்றுவட்டம் இல்லை.

ஆனால், பிரம்ம நிலைக்கு மையப்புள்ளியும் இல்லை, சுற்று வட்டமும் இல்லை. இங்கு பிரம்மமே அறிவாக இருப்பதனால் அந்த பிரம்மம் என்ற நிலையிலே முற்றறிவு (**Total Consciousness**). அது உயிராக வந்ததனால் இயங்கிப் பெற்ற சுற்றறிவு (**Character**) இதுவரையில் இயங்கிப்பெற்ற பதிவுகள் அனைத்தையும் அடக்கமாகக் கொண்டது. அதற்கும் மேலே இந்த உடல் வரையில் நின்று புலன்கள் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கும் போது அது பற்றறிவு.

இவ்வாறாகத் தானே பற்றறிவு, கற்றறிவு, முற்றறிவு என்று மூன்றாகச் சொல்லலாம். இந்த மூன்று நிலையிலும் எங்கேயும் இருப்பது அறிவு ஒன்றுதான் இருக்கும் நிலைக்குத் தகுந்தவாறு, அதனுடைய தன்மைக்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றது. தெளிவினாலே, தவத்தினாலே, பல பிறவிகள் எடுத்த தொடர்பினாலே அவர்களுடைய **Character** இந்த மூன்று நிலையிலே எங்கே வேண்டுமானாலும் நிற்கலாம். ஆனால், விகிதாசாரம் என்ன? அந்தந்த இடத்தில் ஏற்பட்ட பதிவு அழுத்தம், வலுவு எந்த விகிதாசாரத்தில் இருக்கிறதோ அந்த அளவு அதிகமாக இருக்கும்.

# சென்.மேரிஸ் அணிக்கு இரண்டாவது வெற்றி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு 1 அணிகளுக்கிடையிலான கால்பந் தாட்டச் சுற்றுப்போட்டியானது தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் தமது இரண்டாவது போட்டியில் கொழும்பு கூரே அணியை எதிர்த்தாடியது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்றது.

நாவாந்துறை சென்.மேரிஸ் அணி, தனது முதற் போட்டியில், ரெட்சன் அணியை வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டுப்போட்டி முடிவுகள்



கருத்திட்ட முகாமைத்துவ இளைஞர் விவகார தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம் தோறும் நடத்தி வரும் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் 30 ஆவது தேசிய இளைஞர் .விளையாட்டு விழா 25.10.2018 மாத்தறை கொட்டவிலவில் அமைந்துள்ள மாத்தறை மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றுவரு கிறது.

27 ஆம் திகதி 13-20 வயது பிரிவில் செல்வி பவித்திரா உயரம் பாய்தல் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்று கண்டாவளை பிரதேசத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



26 ஆம் திகதி 13-20 வயது பிரிவில் செல்வி டென்சிகா 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்று கண்டாவளை பிரதேசத்துக்கும் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



26 ஆம் திகதி வெள் ளிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் கிளி நொச்சி மாவட்டத்தின், கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்வி டென்சிகா மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

20 வயதுப்பிரிவு தட்டெறிதல் போட்டியில் யாழ்ப்பாணம் வைதத °ஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுஜீவா 28.64 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாமிடத்தைப் பெற்றார். (க-26)

# பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் அச்சுவேலி புனித தெரேசாள் சாதனை



இலங்கை பாடசாலைகள் பளுதூக்கல் சம்மேளனம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் முதன் முறையாக பங்குபற்றிய அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவர்கள் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றி கல்லூரியின் வரலாற்று சாதனையை பதிவு செய்துள்ளனர்.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி கடந்த சனிக்கிழமை கேகாலை டிப்பிட்டிய இராஜகிரிஜ மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 16 வயதுக்கு உட்பட்ட பெண்களிற்கான பளுதூக்கல் போட்டியில் 63 கிலோ நிறைப் பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை சேர்ந்த எஸ். நிதுசா தங்கப் பதக்கத்தையும் அதே நிறைப் பிரிவில் பி.தாட்சாயினி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

58 கிலோ எடைப் பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை சேர்ந்த கோல் டாமேரி நான்காமிடத்தையும் பெற்றனர்.

பாடசாலை வரலாற்றில் தேசிய மட்டத்தில் பதக்கத்தை கைப்பற்றியது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (க-60)

# பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்டம் மூன்றாமிடத்தை பெற்றது கலைமதி



பிரான்ஸ் தமிழர் உதை பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில், வலிகாமம் லீக் ஒழுங்கமைத்து நடத்திய கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானங்களில் தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடமாகாணம் தழுவிய வகையில் நடைபெற்றதுடன். 24 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இந்தச் சுற்றுப்போட்டியின் 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து நாவாந்துறை சென். லூட்ஸ் அணி மோதியது. கலைமதி அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# ரி.பி.பத்மநாதன் வெற்றிக்கிண்ணத்தின் காலிறுதி அணிகள் முன்னேற்றம்

கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் முன்னாள் கால்பந்தாட்ட பயிற்றுநர் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாண லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது 27 ஆம் திகதி முதல் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக, வலிகாமம் லீக்கின் ஒழுங்கமைப்பில் நடத்தப்பட்டு வந்து, சில குழப்பங்களால் இம்முறை யாழ்ப்பாண லீக்கின் ஒழுங்கமைப்பில், ராஜகாந்தன், தர்மகுலசிங்கம் மற்றும் மோகன்ராம் ஆகியோரின் அனுசரணையில் நடைபெறுகின்றன. நொக்கவுட் முறையில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியில், மொத்தம் 16 அணிகள் பங்குப ற்றுகின்றன.

கடந்த 27, ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று ஆட்டங்க ளில், பாசையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதியது:

இதில் அன்ரனீஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதியது. ,தில் யூனியன் அணி, 4:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஐக்கியம் அணி மோதியது. இதில் 01:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வென்றது.

ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

நாவாந்துறை கலைவாணி மற்றும் நாவற்குழி அன்னை அணிகளுக்கிடையிலான போட்டியில், போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. தொடர்ந்து நடைபெற்ற பெனால்ட்டி உதையில் அன்னை அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவிருந்த போட்டியில், எவரெஸ்ட் அணி வருகை தராமையால், பாடும்மீன் அணி வெற்றிபெற்றது.

அரியாலை ஐக்கியம் அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதவிருந்த போட்டி, எல்லாளன் அணி வருகை தராமையால், அரியாலை ஐக்கியம் அணி வெற்றிபெற்றது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணிக்கும் உரும்பிராய் சரஸ்வதி அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த போட்டியில், உரும்பிராய் சரஸ்வதி அணி வருகை தராமையால், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.(க-26)

# அரையிறுதிக்கு தகுதிபெற்றது குருநகர் பாடும்மீன் அணி



அமரர் ரி.பி.பத்மநாதனின் ஞாபகார்த்தமாக யாழ்.உதை பந்தாட்ட லீக் நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுத்தொடரின் நேற்று காலை நடைபெற்ற போட்டியில் நாவற்குழி அன்னை அணியை எதிர்கொண்ட பாடும்மீன் அணி 2-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

அணி சார்பாக ஜஸ்சன், கெயின்ஸ் தலா ஒவ்வொரு கோலினைப்போட்டனர். (க-106)

## நல்லாட்சியை...

கங்களில் வெளிவந்த கொலை சதி திட்டங்களைப் பற்றி விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அந்த தகவல்களை முன் வைத்து 48 மணித்தியாலங்கள் கடப்பதற்கு முன்பாகவே பொலிஸ்மா அதிபர் அந்த தகவல்களை வெளியிட்ட நபர் சாட்சியமாக கையளித்த ஒலிநாடாக்கள் சந்தேகமானவை என அறிவித்தார். நாட்டின் ஜனாதிபதியை கொலை செய்யும் சதித்திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்ட ஒலிநாடா மீதான எந்த விதமான தொழில்நுட்ப விசாரணையையும் மேற்கொள்ளாது அந்த ஒலிநாடா சந்தேகத்திற்குரியது எனக்கூறும் அளவிற்கு பொலிஸ்மா அதிபரின் அந்த கீழ்த்தரமான செயற்பாடு ஒரு பொலிஸ்மா அதிபருக்கு உகந்ததா என மதிப்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த சதி பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வு திணைக்களமும் புலனாய்வு பிரிவினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அரசாங்கத்தின் புலனாய்வு குழுக்களும் இதுவரை பெற்றுக்கொடுத்திருக்கின்ற தகவல்களின்படி இந்த சதித்திட்டம் மிகப் பாரதூரமானதாகவே இருக்கின்றது. நாட்டு மக்களுக்கு இதுவரை அறியக் கிடைக்காத பெருமளவு தகவல்கள் இது தொடர்பில் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் பற்றிய தகவல்களையும் இந்த நபர் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். அதேநேரத்தில் இந்த விசாரணைகளுக்கு பாதகமான முறையில் பலவிதமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்புமிக்க சில அதிகாரிகள் இந்த விசாரணைகளின் முக்கியமான திருப்பு முனைகளில் கைநழுவிச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் நாட்டு மக்களாகிய எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய உங்களிடம் நான் மிகுந்த கௌரவத்துடன் கேட்டுக்கொள்வது இந்த அரசியல் நெருக்கடி பொருளாதார நெருக்கடி ஆகியவற்றிற்கு பின்னால் என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய மிக முக்கியமான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில் என் முன் எஞ்சியிருந்த ஒரே தீர்வு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து அவரை பிரதமர் பதவியில் அமர்த்தி புதிய அரசாங்கத்தை அமைப்பது மாத்திரமே ஆகும். இந்த புதிய அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற மதிப்பிற்குரிய 225 அங்கத்தவர்களுக்கும் வெளிப்படையாக நான் அழைப்பு விடுக்கின்றேன். மிகத் தூய்மையான எண்ணத்துடன் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் அரசியல் நெருக்கடி இப்போது பெருமளவு தணிந்திருக்கின்ற நேரத்தில் எமது நாட்டின் எதிர்காலத்திற்காக நான் எடுத்திருக்கும் இந்த தீர்மானத்துடன் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி புதிய அரசாங்கத்தை அமைக்கும் எனது தீர்மானத்துடன் உங்களதும் எனதும் இந்த உன்னத தாய் நாட்டிற்காக அந்த உன்னத குறிக்கோளை அடைந்து ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி, மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்தி, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, மக்களின் வரப்பிரசாதங்களை பலப்படுத்தி வளமான பொருளாதாரம் மிக்க பண்புமிக்க மிகவும் ஒழுக்கமான சமூகத்தை கட்டியெழுப்ப இந்த புதிய அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு தருமாறு நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

### மகேந்திரனை ரணில் அழைத்து வரவேண்டும்

கடந்த கால கசப்பான அனுபவங்களைப் பற்றி நான் இங்கே மீண்டும் குறிப்பிட வேண்டும். அர்ஜுன் மகேந்திரனை இந்த நாட்டுக்கு அழைத்துவந்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பை ரணில் விக்கிரம சிங்கவே ஏற்றுக்கொள்ள வேண் டும். அதற்குக் காரணம் இந்த நாட்டில் யாவரும் அறிந்தவாறு அர்ஜுன் மகேந்திரன் ரணில் விக்கிரமசிங்கவின் மிகவும் நெங்கிய நண்பன் என்பதனாலேயே ஆகும். கடந்த சில வருடங்களாக நம் நாட்டின் தேசிய கைத் தொழில துறை நலிவடைந்து சென்றிருக்கின்றது.

அவற்றை ஊக்குவிப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் அரசாங்கத்திடமிருந்து போதுமான அளவுஒத்துழைப்பு கிடைக்கவில்லை. வெளிநாட்டு முதலீடுகளில் மாத்திரம் நம்பிக்கை வைத்து உள்நாட்டு கைத்தொழிலாளர்களையும் உள்நாட்டு வர்த்தகர்களையும் நலிவடையச் செய்யும் பொருளாதாரக் கொள்கையே முக்கியமாக இங்கே செயற்படுத்தப்பட்டது. இந்தப் பொருளாதாரக் கொள்கையின் குறைபாடுகள் ஒருபுறத்தில் இருக்க மறுபுறத்தில் இந்தப் பொருளாதாரத்தை சிதைத்த மேற்குறிப்பிட்ட மத்திய வங்கி கொள்ளையின் குற்றவாளிகளுக்கு துரிதமாக தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கான சட்டம் மீதான திருத்தங்கள் தொடரபில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தீர்களா? என நான் உங்களிடம் வினவ விரும்புகின்றேன். சட்ட நிபுணர்கள், சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட இந்த விசாரணைகளை நடத்திய அனைத்து அதிகாரிகளும் இந்த வருட முற்பகுதியிலேயே இப்போது இருக்கின்ற சட்டதிட்டங்களுக்கு அமைய மத்திய வங்கி கொள்ளையின் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமாயின் அதற்கு குறைந்தபட்சம் 15 வருடங்களுக்கு மேல் செல்லும் என தெரிவித்திருக்கின்றார்கள். அவர்கள் கொள்ளையடித்த பணத்தை மீளப் பெறுவதற்கும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கும் 15 வருடங்களுக்கு முன் இயலாத காரியம் என்பதை சட்ட நிபுணர்கள் எனக்கு விளக்கமளித்திருக்கின்றார்கள். அதற்குத் தீர்வாக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக் குழு சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன இந்த விசாரணையை ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்து மக்களின் இந்த பெருந் தொகை பணத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஒரு வருடத்திற்குள் விசாரணைகளை நடத்தி முடித்து பெறுபேறுகளைப் பெறுவதற்கு இயலும் வகையில் இலஞ்ச, ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களைப் பற்றி எமக்கு அறியத் தரப்பட்டது. குறிப்பிட்ட அந்த மாற்றங்களை செய்து இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே ஜனாதிபதி அலுவலகம் ஊடாக பாராளுமன்றத்திற்கு அதனை அனுப்பி வைத்தோம்.

ஐந்து மாதங்கள் கடந்தும் அவை இன்னும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த ஆவணம் சபாநாயகர் அலுவலகத்தின் பெட்டிகளுக்குள் சென்றுவிட்டன. இதைப்பற்றி நான் மிகத் தீவிரமாக விசாரித்தேன். இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களிடமும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடமும் வினவினேன். அதற்கமைய கடந்த வாரம் பாராளுமன்றத்தின் முன் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக குழுவின் சட்ட சீர்திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆயினும் அதற்கான பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதை திகதி குறிப்பிடப்படாது பின்போடப்பட்டிருக்கின்றது. அவ்வாறு பின்போடப்பட்டது ஏன்? எவரின் தேவைக்காக? எவரின் தலையீட்டினால்? இதனால் பொதுமக்களுக்கு சொந்தமான இந்த பெருந்தொகைப் பணம் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் கிடைக்காது போகின்றது.

குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க 15 முதல் 20 வருடங்கள் வரை செல்லும். இந்த சீர்திருத்தம் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டதன் நோக்கம் இதுவே. கடந்த காலங்களில் ஈஏபி நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் பற்றிய ஒரு சம்பவத்தை நீங்கள் ஊடகங்களில் கண்டிருப்பீர்கள். அந் நிறுவனத்தை வெளிநாட்டு வர்த்தகர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விலைமனுக் கோரல் இல்லாத ஊழல் நிறைந்த ஒரு கொடுக்கல் வாங்கலாகவே ஈஏபி நிறுவனத்தின் செயற்பாடுகள் இருக்கின்றன. இதைப் பற்றியும் எதிர்வரும் காலங்களில் விரிவான விசாரணைகளை நடத்த எண்ணியிருக்கின்றேன். பெறுமதிமிக்க விசேட விலைமனுக்கோரல்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. கட்டிட நிர்மாணப் பணிகளும் விலைமனுக் கோரலின்றி கொடுக்கப்பட்டிருக்கின்றன. விலைமனுக் கோரல்கள் அற்ற விதத்தில் அமைச்சரவைக்கு அவசரமான ஆவணங்களாக சமர்ப்பிக்கப்பட்டு அவை மீதான எதிர்ப்புகளை கவனத்தில் கொள்ளாது இந்த பாரிய நிர்மாணப் பணிகள் அந்நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கண்டி அதிவேக வீதி அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட காணி பற்றிய விசேட விதிமுறைகள் சட்டம் மற்றும் காணி வங்கியை ஸ்தாபிப்பதற்கான சட்டத்திற்கு நான் எனது கடும் எதிர்ப்பை தெரிவித்து அவற்றை பிற்போட்டேன். அமைச்சரவையில் பெரும்பாலும் அமைச்சர்கள் இச்சட்டத்தினை எதிர்க்கின்றார்கள்.

அதேபோன்று இங்கு இன்னொரு விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பொருளாதார முகாமைத்துவ சபை பாரிய ஊழல்களைக் கொண்டதாகும். அதனை இரத்துச் செய்வது பெரும் சவாலாகவே இருந்தது. இருப்பினும் கடும் முயற்சியின் பின்னர் அதை நான் இரத்துச் செய்தேன். அச்சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஊழல் மிக்கவையாக இருந்தன. அதற்கான ஒரு மாற்றுத்திட்டமாகவே நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யும் வகையில் நான் தேசிய பொருளாதார சபையை உருவாக்கினேன். அந்த தேசிய பொருளாதார சபையை பலவீனப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். அந்த பொருளாதார சபைக்கு நியமிக்கப்பட்ட பொருளாதார நிபுணருக்கான மாதாந்த கொடுப்பனவு உலக அங்கீகாரத்தைப் பெற்ற எம்முடன் தொடர்புகளை வைத்திருக்கும் விசேட சர்வதேச நிதி நிறுவனம் மூலமே வழங்கப்பட்டது. அந்த சர்வதேச நிதி நிறுவனம் பெற்றுக் கொடுத்து வந்த மாதாந்த கொடுப்பனவு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அந்நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுத்த ஆலோசனைக் கமைய நிறுத்தப்பட்டது. அவ்வாறு தேசிய பொருளாதார சபையினை பலவீனப்படுத்துவதற்கும் அதன் செயற்பாடுகளை தடுப்பதற்கும் தன்னாலான அனைத்தையும்அவர் செய்து வந்தார். ரணில் விக்கிரமசிங்க அவர்களின் முரட்டுத்தனமான தீர்மானங்களே இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாக அமைந்தது என்பதை நரன் தெளிவாகக் கூறவேண்டும். இதனால் இவ்வாறான அனைத்து செயற்பாடுகளுக்கும் எனக்கிருந்த ஒரே மாற்றுவழி மகிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக நியமித்து புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும். மகிந்த ராஜபக்ஷவை புதிய பிரதமராக பதவியில் அமர்த்தி இந்த புதிய அரசாங்கத்தை அமைப்பது இலங்கை அரசியல் யாப்புக்கு முரணான செயலாகுமென ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்துகின்றது. என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த தீர்மானமானது சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளின்படி அரசியல் யாப்புக்கு அமைவாக எந்தவித முரண்பாடுகளும் அற்ற விதத்திலேயே இந்தப் பதவிப் பிரமாணமும் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையும் புதிய அரசாங்கத்தை உருவாக்குவதும் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த செயற்பாடுகள் அரசியல் யாப்புக்கு முரணானவை என்ற குற்றச்சாட்டை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன் என்பதை மிகுந்த கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் இன்று நிலவுகின்ற அரசியல் நிலைமையின்படி இந்த நாட்டின் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை, வான்படை, படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பு எனக்கு பெற்றுத்தரும் ஒத்துழைப்பைக் கொண்டு நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பலப்படுத்தி ஜனநாயகக் கட்டமைப்பை பலப்படுத்தி நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை இலகுவாக முன்னெடுப்பதற்கு வசதியளிக்கும் வகையில் இந்த அனைத்து தரப்புகளும் அவர்களது கடமைகளை முன்னெடுத்து வருவதையிட்டு அவ்வனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று எனது இந்த உரையை பூர்த்தி செய்யும் நேரத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் என்னை ஜனாதிபதியாக நியமிப்பதில் பாரிய அர்ப்பணிப்புகளை செய்தார்கள் என்பதை நினைவு கூரும் அதே நேரத்தில் நமது இந்த தாய் நாட்டின் சுபீட்சத்திற்காக அன்று நாம் ஏற்படுத்திக் கொண்ட குறிக்கோள்களை அடைய நாம் அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் எனக் கூறிக்கொள்வதுடன் உங்களுக்கும் உங்களது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நன்நோக்குமிக்க தேசப்பற்றுமிக்க நாட்டின் சாதாரண குடிமகனின் வேதனைகளை உணர்கின்ற சேனாநாயக்க, ஜயவர்தன, பிரேமதாச ஆகியோரின் தூரநோக்கையும் குறிக்கோள்களையும் பாராட்டுகின்ற ஒரு தலைவரை எதிர்காலத்தில் நீங்கள் பெறுவீர்களாயின் நாங்கள் அனைவரும் எதிர்பார்க்கின்ற அந்த உன்னத குறிக்கோளை அடைய முடியும் என நான் நம்புகின்றேன். ஆகையால் எனது நாட்டுக்காகவும் எனது அன்புக்குரிய மக்களுக்காகவும் நான் மேற்கொண்ட இந்த அரசியல் தீர்மானத்தினால் பொருளாதார நெருக்கடியை தீர்த்து அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து சுபீட்சமான பொருளாதாரத்துடன் நல்லதோர் சமூகத்தைக் கட்டியெழுப்ப உயரிய ஆன்மீக சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவோம் எனக்கூறிக் கொள்வதுடன் அதற்காக ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அனைத்து அரச ஊழியர்களையும்சகல அரசியல்வாதிகளையும் மதிப்புக்குரிய மகா சங்கத்தினரையும் ஏனைய மதத் தலைவர்களையும் மிகுந்த கௌரவத்துடன் அழைப்பதுடன் இப்பணிகளை இனிதே நிறைவேற்ற உங்களது ஒத்துழைப்பையும் ஆசீர்வாதத்தையும் நல்குமாறு மிகுந்த கௌரவத்துடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றார் ஜனாதிபதி. (மு)

மஹஜன சம்பத
திகதி 2018/10/28
சீட்டிழுப்பு இலக்கம் 3777
C 9 4 0 6 9 2

கொவிசெத
திகதி 2018.10.28
சீட்டிழுப்பு இலக்கம் 1926
K 14 46 69 74

தன நிதானய
திகதி 2018-10-28
சீட்டிழுப்பு இலக்கம் 68
S 25 37 50 71

நீரோகா
திகதி 2018/10/28
சீட்டிழுப்பு இலக்கம் 465
ரிஷபம் 14 21 50 61 26

## ரணதுங்கவின்...

தாபனத்துக்கு நேற்று பிற்பகல் வந்த, முன்னாள் பெற்றோலிய வளங்கள் அமைச்சரான அர்ஜுன ரணதுங்கவுக்கு, மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து, அவரைத் தடுத்து வைத்தனர். இதனால் பதற்றநிலை ஏற்பட்டது.

இதன்போது, அர்ஜுன ரணதுங்க மீது தாக்குதல் நடத்த முற்பட்டவர்கள் மீது, அவரது பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் மூன்று பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து, அர்ஜுன ரணதுங்கவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் ஆர்.ஈ.ஏ.ராஜபக்ஷ என்பவர் உயிரிழந்தார் என்று தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்தில் இருந்து முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்ல ரணதுங்க வந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மகிந்த அணி குற்றஞ்சாட்டியுள்ளது. (மு)

## கேபிள் ரீ.வி...

குடும்பப் பெண்ணே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் தனிமையில் வசித்து வந்துள்ளார். நேற்று அவரை காணவில்லை என அயலவர்கள் தேடிச்சென்ற போது வீட்டின் உள்ளே கேபிள் இணைப்பை பிடித்தபடி சடலமாக காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மின்சார இணைப்பின் ஊடாக கேபிள் இணைப்புகள் வழங்கப்படுவதால் மின்சாரம் தாக்கி அண்மையில் இருவர் உயிரிழந்த நிலையில் மேற்குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-9-101)

## தேர்தல்: மாகா...

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் அவரால் முதன்முறையாக நேற்று மாலை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கூட்டணியிலிருந்து வெளியேறியதை தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் முடிவிற்கு வந்தது. இதன் பின்னர் புதிய அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பு ஜனாதிபதியின் தோள்களில் சுமத்தப்பட்டது. புதிய அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்துடன் பிரதம மந்திரி பதவியை ஏற்குமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கை இன்று நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றது. ஜனாதிபதியையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரையும் கொலை செய்வதற்கான சதி முயற்சிகள் குறித்த தகவல்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன. இந்த சதி முயற்சியில் ஈடுபட்டவர்கள் தங்கள் நடவடிக்கைகளால் தங்களை அம்பலப்படுத்துகின்றனர். நாடு தொடர்ச்சியாக குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பாதாள உலகத்தவர்களின் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இலங்கை ரூபாயின் பெறுமதி அச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் வீழ்ச்சியடைகின்றது. அதிகரித்துக் கொண்டு செல்லும் வாழ்க்கை செலவீனங்களால் மக்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய வங்கி பிணை முறி மோசடி வட்டி வீதத்தை இரட்டிப்பாக்கியுள்ளதால் வர்த்தக சமூகத்தினரும் சாதாரண பொதுமக்களும் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதே வேளை ஐக்கிய தேசிய கட்சி தேசத்தின் பெறுமதிமிக்க சொத்துக்களையும் நிறுவனங்களையும் விற்கும் வேட்கையுடன் உள்ளது.

இது தேசிய குழப்பநிலை நிலவும் தருணம் என்பதையும் மக்கள் எங்கள் தலைமைத்துவத்தையும் பாதுகாப்பையும் எதிர்கொள்கின்றார்கள் என்பதையும் நான் அறிவேன். இதன் காரணமாக பிரதமர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.

நாங்கள் வெறுப்புணர்வு நிலவும் அரசியலை கைவிட்டு அனைத்து மக்களினது மனித உரிமைகளையும் நீதித்துறையினது சுதந்திரத்தையும் பாதுகாக்கும் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்தும் இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவோம். இந்த முயற்சியில் எங்களுடன் இணையுமாறு நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களிற்கும் நான் அழைப்பு விடுகின்றேன். இந்த மிக முக்கியமான முயற்சியில் அனைத்து சமூகங்களையும் மதங்களையும் இணையுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடன் இணைந்து கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நோக்கம் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வரும் மாகாண சபை தேர்தல்களையும், மேலும் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளிற்கு முடிவு கட்டுவதற்கான திட்டத்திற்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பை மக்களிற்கு வழங்குவதற்காக நாடாளுமன்ற தேர்தலையும் நடத்துவதாகும் என தெரிவித்துள்ளார். (மு)

## எழுத்துமூலம்...

ரவு வழங்குவதற்கான சாத்தியம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்பாக பேசி வருகிறோம். இருதரப்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையுடன் பேசியுள்ளது.

அவர்களிடம், அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, அரசியல் அமைப்பு, ஐ.நா தீர்மானம் நடைமுறைப்படுத்தல் போன்ற நிபந்தனைகளை தெரியப்படுத்தியுள்ளது.

இம்முறை நிபந்தனைகளுக்கான உத்தரவாதம் எழுத்துமூலம் வழங்கப்பட்டால் மாத்திரமே அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்படும். த.தே.கூ தலைமை இது தொடர்பாக கலந்துரையாடி வருகின்றது. அதன் பின்னரே சரியான முடிவை அறிவிக்க முடியும் என மேலும் தெரிவித்தார்

இது தொடர்பாக த.சித்தார்த்தன் கருத்து தெரிவிக்கையில், த தே கூ இன் தலைமை அறிவிக்கும் முடிவின்படி செயல்படுவோம் என தெரிவித்தார். (மு-9)

## மகிந்த இன்று...

பண்டாரநாயக்க அரசாங்கத்திலும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக கடமையாற்றியிருந்தார்.

மேலும், இலங்கையின் 22-வது பிரதமராக இன்றைய தினம் மகிந்த ராஜபக்ஷ கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்கின்றார். (மு)

## ரணிலின் பாது...

ள்ளது.

இதன்படி, அவருக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு என்பன குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்து நீக்கப்பட்டு, புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார்.

இதற்கமைய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த மேலதிக பாதுகாப்பு பிரிவினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் நீக்கப்பட்டு 10 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை உடனடியாக நடைமுறைப்படுத்தி தமக்கு அறிவிக்க வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்(மு)


**டுபாய் வேலைவாய்ப்பு**

எஞ்சின் & கியர் மெக்கானிக், மோட்டார் சைக்கிள் மெக்கானிக் வாகன மின்னியலாளர்(வயறிங்), ரயர் ரெக்னீஷியன், சேர்விஸ்

ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ 200/- மட்டுமே

077 00 38 215
021 222 00 11

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

வடக்கின் முதல் & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

**ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்**
**ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்**

வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு அருகில்.
திருமணத்தடை, புத்திரபாக்கியம்/ புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள்.
வவுனியா பண்டாரிக்குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)
தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:
076 328 7119
(C-4263)

**விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் உள்ள பிரபல்யம் வாய்ந்த புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் பெண்ணும் தேவை.
தொடர்பு:
077 348 2634
(C-4284)

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-4077)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-4098)

**அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!**
**இன்னும் 8 நாட்கள் மட்டுமே உள்ளன**

2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாட்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.



திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
321, K.K.S Road, Jaffna.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்)
தொ.பே இல.: 077 755 4528
(6121)

**அமெரிக்க அதிஸ்ட விசா- இன்னும் 3 நாட்களே உள்ளன!**

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
அமெரிக்கா செல்வதன் மூலம் விசா இன்றி கனடா உட்பட பல்வேறு நாடுகளுக்கு பயணம் செய்யலாம்.
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000 இலவச விசாக்கள்
0768226243
கடந்த காலங்களில் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கடைசி நேரத்தில் மிக நம்பிக்கையுடன் வவுனியாவில் இருந்து வந்து மிக நீண்ட வரிசையில் காத்திருந்து பதிவு செய்தேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எனது அமெரிக்க விசாவிற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
உடனே விரையுங்கள்



சுபராம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை
V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0768226241 | 0768226230 | 0776697960 |

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம்
UK - 550/=,
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)
3-5 Working Days

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சி-4247)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.